# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு மாசிமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்


## லூர்துபதி நூற்றுண்டுவிழா ஞாபக

## விசேஷ இதழ்

# அம்மா! உம்முடைய பெயர் என்ன?

அன்று பங்குனிமாதம் 25-ந் திகதி. தேவமாதாவுக்குக் கபிரியேல் சம்மனசானவர் மங்கள வார்த்தை சொன்ன திருநாள். லூர்துகெபியிலே மாதா பெர்னதெத்துக்குத் திரும்பவும் காட்சியளித்தார். பெர்னதெத் முழந்தாளிலிருந்துகொண்டு அவரை நோக்கி: "அம்மா! உம்முடைய பெயர் என்ன?" என்று பணிவாகக் கேட்டாள். அப்போது மாதா தமது கரங்களைவிரித்து மார்பு

**1858**

வரை உயர்த்தினர். வானத்தை ஏறெடுத்து நோக்கினர். பின்னர் தமது கரங்களை மெல்ல விரித்து "நாமே அமலோற்பவம்" — அதாவது "மாசில்லாத உற்பவம் நாமே" என்று கனிவாகப் பதிலளித்தார். இது ஓர்பெரிய வெளிப்படுத்துதல் ஆயிற்று. ஏனெனில், அதற்கு நான்கு வருடங்களின் முன்னரே — அதாவது 1854-ம் ஆண்டு 9-ம் பத்திநாத பாப்பானவர் தேவமாதா மாசில்லாமல் உற்பவித்தார் என்பதை விசுவாச சத்தியமாக நிர்ணயித்துத் தமது வழுவாவரத்தைக்



"நாமே அமலோற்பவம்"

கொண்டு அகில முழுவதும் பிரகடனஞ் செய்திருந்தார். நான்கு ஆண்டுகளுக்குப்பின் தேவதாயாரின் திருவாக்கின் மூலம் இது உறுதியாயிற்று. இது ஒன்றே பாப்புமார் வழுவாவரமுள்ளவர்கள் என்றும், லூர்து நகரில் காட்சியளித்தவர் தேவதாயாரே என்றும், மாதா உண்மையிலேயே அமலோற்பவி என்றும் உறுதிப்படுத்தியது. மாதாவின் பெயரைக் கேட்டறியுமாறு

**1958**

வற்புறுத்தியவர் அவ்வூர்ப் பங்குக் குருவானவரே. 25-ந் திகதி அருளப்பெற்ற காட்சிக்குச் சில தினங்களின் முன் அவள் இவரிடம்போய்க் காட்சியில் தான் கண்ட மாது அவ்விடம் ஓர் கோவில் கட்டவேண்டும்; சனங்கள் அவ்விடத்துக்குச் சுற்றுப்பிரகாரமாக வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்தாள். அப்போது சுவாமியார் "அது யார் அந்த மாது" என்று கேட்டு, அவள் பெயரைக் கேட்டறிந்து வருமாறு பெர்னதெத்திடம் கூறியினுர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல்துறை லூர்துகெபித்திருநாள்

## லூர்துபதியில் மாதா தரிசனமளித்த நூருவதுஆண்டின் நிறைவுவிழா

இத்திருநாள் இவ்வருடம் மாசி மாதம் 3-ந் திகதி அர்ச். தொம்மை அப்போஸ்தலர் கோவிலில் ஆரம்பமாகிப் 14-ந் திகதி வரைக்கும் நவநாள் ஆராதனை நடக்கும். 15-ந் திகதி இரவு மகா சுற்றுப்பிரகாரத்துடனும், மறுநாள் 16-ந் திகதி காலை மகாவந். மேற்றிராணி ஆண்டவருடைய திவ்விய பூசையுடனும் பூர்த்தியாகும்.

**15-ம், 16-ம் திகதிகளின் நிகழ்ச்சிநிரல்**

15-ந் திகதி பிற்பகல் 6-45 மணிக்கு மகாசுற்றுப்பிரகார ஆரம்பம்.
8-30 மணிக்குச் சுற்றுப்பிரகாரம் மாதகல்துறைக் கெபியை அடைந்ததும் பிரசங்கம்.
பின்னர் மேற்றிராணிஆண்டவரால் வேஸ்பர் ஆராதனை.
9-00 மணிக்குத் தேவநற்கருணை ஆராதனை.
9-30 மணிக்குத் தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம். (கெபியைச்சுற்றி)
10-00 மணிக்குத் தேவநற்கருணை ஆசீர்வாதம்.

16-ந் திகதி காலை 7-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவரால் திவ்விய பூசை. யாத்திரிகளின் ஆன்ம வசதிகளைக் கவனிக்கப் பல குருமார் சமுகமாயிருப்பார்கள்.

கட்டளைக்குரு

மாதகல், 28-1-58.

# TUITION
IN
**Shorthand-Typewriting and Music**

Shorthand : Pitman's Phonetic System
Typewriting : Vertical Touch Method
} Theoretical course and Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

**Shorthand Speed Training a Speciality**

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

Church Music : English and Plain-Chant (Gregorian)

**Individual attention paid to each student.**

**JOSEPH ANDREW,**
"De Mazenod", 4th Cross Street, Jaffna.

# அந்தியகால அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்**

**இல. 4, கண்டிரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்—பதிவு இல. M. 110**

திகதி: 31-1-1958.

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் தேகவியோக மடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்திவிடவும். தவறின் பிரமாணம் 2(2)ன்படி உரிமையை இழக்கவேண்டிவரும்.

காலகதியடைந்தவர் இல: 2076.
காலகதியடைந்தவர் பெயர்: சி. அன்னம்மா.
விலாசம்: நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
திகதி: 31-1-58

மேலும் 834—ம் இலக்க அங்கத்தவரின் சாட்டுதலாளருக்கு ரூபா 1472-62 நன்கொடைப்பணமும், ரூபா 18-50 சந்தாப்பணமும் கொடுபட்டது.

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

# அடைவுநகை விற்பனவுவிளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை, வீ. வேலுப்பிள்ளை அவர்களின் அடைவுகடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மீட்கப்படாது இருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 1958-ம் ஆண்டு மாசிமாதம் 26-ந் திகதி புதன்கிழமை முற்பகல் ஒன்பதுமணி தொடக்கம் என்றைற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| | இல. | திகதி | கொ. ரூ. | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | 4852 | 8-9-1956 | 400-00 | கருங்காலி காரைநகர் | அ. கந்தையா சங்கரப்பிள்ளை | ஒருசங்கிலியும் பென்றனும் |
| (2) | 5240 | 20-11-1956 | 20-00 | சிவகாமிஅம் மன்கோவிலடி காரைநகர் | செல்லப்பா நடராசா | ஒருதாலி |
| (3) | 5295 | 1-12-1956 | 55-00 | ஊரி காரைநகர் | கணபதி செல்லையன் | ஒருகூடு (தகடில்லை) |

காரைநகர் 1958-ம் ஆண்டு தைமாதம் 24-ந் திகதி

**வை. ஏரம்பமூர்த்தி,**
Auctioneer.

## தேவை

மலைநாட்டில் அரசாங்கஉதவிபெறும் பாடசாலையில்படிப்பிக்கப் பயிற்றப்பட்ட இளைப்பாறிய ஒருதமிழ்ஆசிரியர் தேவை. தயவுசெய்து
ஜெனறல் மனேஜர்,
அர்ச். சில்வேஸ்றர் கல்லூரி,
கண்டி
என்றமுகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

## நன்றியறிதல்

பிறேக்ககரின் திருக்குழந்தையேசுவிடமும், அர்ச். சூசையப்பரிடமும் நான் இதுகாறும் கேட்டமன்றாட்டுகள் யாவும் கிடைக்கப்பெற்றேன். அன்றியும் அடியேனின் தாழ்மையான நன்றியறிதலைச் சத்தியவேத பாதுகாவலனில் நேர்த்திப்படி பிரசுரித்தும், அர்ச். சூசையப்பரது உதவியினால் மேலும்அநேக நன்மைசகாயங்களைப் பெற்றுவருகிறேன். அவருக்கு எனதுபணிவான நன்றி வாழ்த்துதல் உரியதாகுக.

A. R.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1435**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**
கோண்டாவில்
முதலித்தம்பி வைத்திலிங்கம்
— வழக்காளி.
எதிராக
கோண்டாவில்
நாகமணி விஞசித்தம்பியும்,
கைம்பெண் யோகம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1435-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் 8-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,347-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்குப் 18-1-57 தொடக்கம், 6-8-57 வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5% வட்டியும், கோட்டுச்செலவு 222 ரூபா 90 சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்கோயிற்பற்று, கோண்டாவில்இறை இத்தியடியும், அரசடியும். ப. கி. இ. 5-உம், கிணற்றுத் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு — பாதையுமகப்பும், சீனிவாசகம் கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். வடக்கு — சேகரம்பிள்ளை பெண் சின்னம்மாவின்ஆதனம். மேற்கு— கனகரெத்தினம் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். தெற்கு — யேற்கெல்லைக் காணிக்குரிய நாலுமுழ அகலம்கொண்ட பாதை. இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
**கொம்மிஷனர்.**

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 30-1-58



2-ம் வருட
## மரண ஞாபகம்

எனது நேசபத்தாவும், எங்களது தந்தையுமான எஸ். ஏ. பர்னாந்து அவர்கள் மரணித்து 2—வதுவருடம் 7—2—58-ல் பூர்த்தியாகின்றமையால் இதைக்கண்ணுறும் வண. குருமார்களே, சங். கன்னியர்களே, பந்துமித்திரர்களே இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கின்றோம். நேசபத்தாவையும், தந்தையையும் இழந்து துயருறும்,
மனைவி: பொன்னம்மாள் பர்னாந்து,
மக்கள்: ஜெரால்ட் பர்னாந்து,
,, ஹிலேரியன் பர்னாந்து,
,, மாட்டீன் பர்னாந்து,
,, ஸ்டென்லி பர்னாந்து.

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் இரக்கத்தினாலும், சதாசகாய மாதாவின் மன்றாட்டினாலும் யான் கேட்டுக்கொண்ட நற்காரியம் அனுகூலமடைந்ததின்பேரில் நேர்ந்தநேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கப்பிந்தியமைக்காக விசனப்படுகிறேன்.

நெடுநடு ஓர் பக்தன்

**திரு. எஸ். ஜோசவ் அவர்களின்**
## அமரத்துவம்

மாதகலை ஜனனபதியாகக் கொண்டவரும், பலராலும் நன்கு அறியப்பெற்றவரும், பிரபல ஆயுர்வேதவைத்தியரும், ஆயுள்காலமுழுவதும் சத்தியவேத பாதுகாவலன் அபிமானியாயும், அதன் சந்தாதாரராயும் இருந்துவந்தவரான திரு. சீமான் பிள்ளை மேரிஜோசெவ் அவர்கள் சென்ற ஒருமாதகாலமாக நோய்கண்டு, கடைசித்தேவ திரவிய அநுமானங்களைப் பூரணஅறிவுடன் பெற்று, சென்ற 25-ந்திகதி தேவனடியைநாடினார்.

இவர் உயர்ந்தலட்சியங்களும், நிரம்பியதேவபக்தியும் உடையவராக இருந்தார். மாதகலில் இவருடையவாழ்க்கை சகலரும்பின்பற்றக்கூடிய முன்மாதிரிகையாக விளங்கிவந்தது. தமது உதாரகுணத்தாலும், பிறர்சிநேகத்தாலும், பரந்தநோக்காலும் யாவரையும் வசீகரித்திருந்தார். இவருடைய தந்தையாரும், பிரபலவைத்தியருமான திரு. லோப்புப்பிள்ளை சீமான்பிள்ளை அவர்கள் 1925-ம்வருடம் காலஞ்சென்றபிறகு, அவரைத்தொடர்ந்து மாதகல், அர்ச். அந்தோனியார் கோவில் நிர்வாகத்தைத் திருப்தியாகவும், திறம்படவும் நடத்திவந்திருக்கிறார். இவருடையபாரியார் திருமதி அந்தோனியாப்பிள்ளை என்பவராகும். இவருடைய நான்குபிள்ளைகளுள் முதல்வரான திரு. எஸ். எம். ஜே. லூயிஸ்அவர்கள் யாழ்ப்பாண உபபிஸ்காலாக இருக்கிறார். இரண்டாவது புத்திரர் திரு. எட்வாட் பங்கிராஸ் புத்தளப்பகுதி சுகாதாரபரிசோதகராகக் கடமையாற்றுகிறார். இவரது புத்திரியாகிய திருமதி கிறேஸ் சிசிலியா அவர்கள் திரு. எஸ். ஏ. சந்திரசேகரா (சங்கானை கோர்ட்ஸ்) அவர்களின் பாரியாராவர். இளையபுத்திரன் திரு. அகஸ்ரின் ஜெயநாதன் கொழும்புப் பகுதி இலங்கை வங்கியில் ஸ்டாவ் அஸிஸ்டன்ட்டாகக் கடமையாற்றுகிறார்.

சனிக்கிழமை சாயந்தரம் 5மணியளவில் இவருடையபூதவுடல் பாரியார், பிள்ளைகள், மருகர், பேரப்பிள்ளைகள், சகோதரரின் பிரலாபத்தக்கிடையில் வண. குருப்பிரசாதிகள் எல். ஏ. சிங்கராயர், எஸ். ஏ. ஞானப்பிரகாசம், பிரான்சீஸ் சேவியர்ஆகியோர் துக்ககீதம்பாட, அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் சேமக்காலையில் பூமிதானம் செய்யப்பட்டது.

## அறிவித்தல்

அரசாங்க சேர்வேயராகக் கடமை பார்த்துச் சமீபத்திலே இளைப்பாறித் தற்போது யாழ்ப்பாணம், கன்னியாஸ்திரிமடத்துவீதியிலுள்ள 16-ம்இலக்க இல்லத்தில் வசித்துவருகின்ற யான் இனிமேல் லைசென்ஸ்பெற்றஓர் உலாந்தாவாக நிலஅளவைசெய்து வருவேன் என்றும், எந்தவிதமான நிலஅளவை வேலையையும்ஏற்றுத் திருப்திகரமாகச் செய்துகொடுப்பேன்என்றும் இத்தாலே பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**K. K. Ambrose**

16 Convent Rood,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூர்துபதி நூற்ருண்டுவிழாவை முன்னிட்டு
அப்பதியின் மேற்றிராணியாரான
மகாவந். தெயாஸ் ஆண்டகை அவர்கள்

# உலகமக்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பு

லூர்துபதி நூறுஆண்டுகளின் நிறைவைக் கண்டிருக்கிறது. லூர்துபதி என்னும்போது பிறனீஸ்மலையிலுள்ள பழையகட்டடத்தைஅல்ல, ஆனல், எமது ஆண்டவளின் "புனிதநக"ரையே ஈண்டு நாம் குறிப்பிடுகின்ரேம். 1858-ம்ஆண்டு மாசிமாதம் 11-ந் திகதியன்று பெர்னதெத்என்ற சிறுமியின் தாழ்மையினலும், தூய்மையினலும் கவரப்பட்டு லூர்துமண்ணில் காட்சியளித்த அமலோற்பவஅன்னைமரி இத்தத் தமதுஅளவற்ற நன்மைத்தனத்தின் இருப்பிடமாக்கியிருக்கிருர். இங்குநடந்தேறும் அற்புதங்களுக்கும், கிடைக்கும்வரங்களுக்கும் கணக்குண்டோ! குணமடைந்தவர்கள், ஆறுதல் அடைந்தவர்கள், மனமாறுதல் அடைந்தவர்களின் எண்ணிக்கைதான்என்னே! எமது திருத்தாயாரின் மனதை அருட்டும்படி இங்கிருந்துஎழுந்த செபங்களின் தொகைதான்என்னே! நூறுஆண்டுகாலமாக இப்புண்ணியதீர்த்தத்தில் லூர்துநாய்கியின்இரக்கம் சுரந்திருக்கிறது. உலகமக்கள் அனைவரும் இன்று லூர்துகெபியையேநோக்குகின்றனர். வரம்வேண்டுவோரின் தொகையைவிட நன்றிகூறுவோரின்தொகையே அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகவே, மாதாவின்பேரால் லூர்துபதி மேற்றிராணியாராகியநாம் இந்த நூற்ருண்டுவிழாவுக்கு உங்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்ரேம். மாதாவுக்குத் தோத்திரஞ்சொல்லவும், வேண்டிய வரங்களைஇரந்துகேட்கவும்இங்கு வரும்படி உங்களை அழைக்கின்ரேம். ஏனெனில், நூற்ருண்டுகள் சென்றும் மாதாவின் கருணை ஊற்றுவற்றவுமில்லை. புன்னகை வதனம் வாடவுமில்லை. இந்த யூபிலிஆண்டில் ஒவ்வோர் யாத்திரிகருக்கும் விசேஷவிதமாக வழங்க இன்னும்எமது ஆண்டவளிடத்திலே வரங்கள் நிறைய உண்டு. லூர்துபதி வரங்களின் கருத்து என்னவெனில், எம்மைக் கடவுளுடன் அதிகமதிகம் நெருங்கி ஒன்றிக்கச் செய்வதாகும். இன்று லூர்துபதி இன்றேல் கடவுள்மட்டில் மதிப்பும், அன்பும் குறைந்திருக்கும். திவ்வியநற்கருணையில் விசுவாசமும் குன்றியிருக்கும். நாம் திருச்சபைக்கும், பரிசுத்த பிதாவுக்கும் காட்டும் பிரமாணிக்கத்தில் தளர்ந்திருப்போம். நாம் எல்லாம்வல்ல இறைவனை அண்டிச்செல்லும்படியாகவே எமதுஅன்னை எம்மைஅண்டிவந்திருக்கிருர் என்பதே லூர்துதிருசேத்திரத்தின் உட்பொருளாகும்என்க.

# லூர்துபதியும் புதுமைகளும்

— ஜே. ம. ஞானதிக்கம், S. J. —

1854-ம்ஆண்டுக்கு முற்பட்ட ஒன்பதுஆண்டுகளாகப் பிரான்ஸ், இத்தாலி முதலாம் தேசங்களில் மக்களின் மகிழ்ச்சியை அடக்கும் நாஸ்திகம் நர்த்தனஞ்செய்தது. கடவுள் இல்லையென்று காடியாய்க் கத்தினர், புத்தியில்பேர்பெற்றுப் பூதலமண்ணில் புரண்ட பெரியபெரிய சாஸ்திரவிற்பன்னர் அப்போது நாட்டை விட்டுத் துரத்தப்பட்டு, உலகஅரசை இழந்து, ஓர் அகதியைப்போல வத்திக்கானில் அடைபட்டு, அகிலஉலகமும் அநாதையென்றுகருதிய, ஆனல், ஞானத்திலும், வயதிலும்உயர்ந்த 9-ம்பத்திநாதபாப்பானவர் கன்னிததாய் சென்மபாவதோஷமின்றி உற்பவித்தாள்; அவள் அமலோற்பவி என்னும்அற்புத சத்தியத்தைப் பிரகடனஞ்செய்தார். தமதுதாசனின் — திருச்சபைத் தலைவரின் வளமமலிவாக்கு உண்மையென்று சாதிக்கக்கருதித் தேவதாய் 1858-ம்ஆண்டு மசபியல் குகையில் காட்சியளிக்கச் சித்தமானள். பெரிய சாஸ்திரவிற்பன்னர்களின் புத்தியைச் சிதறடிக்கப் படிப்பும்,பணமும் இல்லாது, புத்தியிலும், உடல்நலத்திலும், உலகதிரவியத்திலும் நலிந்துகிடந்த பெர்னதெத்எனனும் ஒருசிறுமிக்குப் மாசிமாதம் 11-ந்திகதி முதன்முதலாகத்தோன்றினள். இந்தச்சிறுமிக்குப் 18முறை காட்சியளித்தது "அமலோற்பவம் நாமே"என்னும் அர்புதஞ்சொரியும் தமது பெயரை எடுத்துக்கூறினள்.

### ஆச்சரியமான நீரூற்று

நாஸ்திகத்தை நசுக்கிவாட்டவும், கடவுள்உண்டென்னும் சத்தியத்தை உறுதியாய்நிலைநாட்டவும், தெய்வபயத்தை ஊட்டவுமே தேவதாய் மசபியல் குகையிருந்த லூர்தில்தோன்றினள். அஃது எவ்விதம்? காட்சியொன்றிலே அவ்விடத்துக்கு அருகாமையிலுள்ள கட்டாந்தரையில் ஒருசிறுபள்ளம் பறிக்கும்படி சூதுவாதில்லாச்சிறுமியை மோட்சமாதாகேட்டாள். அச்சணத்தில் கையகலமான அப்பள்ளத்திலிருந்துஉண்டானது ஆச்சரியமான ஓர் நீரூற்று. அந்தஊற்றுநீரினல் அன்றுமுதல் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குச் சுகம். இவ்விதபுதுமைகள்தான் காலாகாலமாக உலகையெல்லாம் ஆண்டுநடத்திவரும் கடவுள் ஒருவர் உண்டென்றும், கத்தோலிக்க சத்திய திருச்சபை உண்மையென்றும் காட்டிவருகின்றன. ஏனைய சமயங்களில் புதுமைகள் இல்லையா? ஆம், அவைகள்போலிப்புதுமைகள். எவ்விதம் அவைகளைப் பிரித்துக்காட்டுவது என்பதற்காக இரண்டொருவார்த்தைகள்.

ஏறக்குறைய இன்றைக்குத் 96 ஆண்டுகளாக லூர்துநகரில் புதுமைகள் நடந்தவண்ணமே இருக்கின்றன. அவைகள் விசுவாசமில்லாத சாஸ்திரிகளுக்குப் பெரும்பிரச்சனையாகவும், தலைவலியாகவும் தோன்றுகின்றன. கத்தோலிக்கரிலே படித்தோருக்கும், பாமாருக்கும் இதில் ஒருபிரச்சனையும் இல்லை. யேசுநாதர் உலகில்போதித்தகாலை எத்தனையோ அற்புதங்களைச் செய்தார். அதேஅற்புதங்களைத் தமது திருத்தாயின் மகிமைக்காக அவர் லூர்துநகரில் செய்துவருகிருர்.

### புதுமைகளின் ஆராய்ச்சி

உலகில் புதுமையென்பதே கிடையாதென்று ஒருவார்த்தையில் சொல்லிவிட்டுக் கடுவன்பூனையைப்போல் கண்ணைமூடிக்கொள்பவர்கள் சிலர். மறுசமயங்களிலும் இவைகள் நடக்கின்றனஎன்று பகுத்தறியாத வார்த்தைகளைப் பிதற்றுகிறவர்களும் உண்டு. லூர்துநகரிலே புதுமைகளை ஆராய்ச்சிசெய்து காட்டுவதுபோல அந்தப்பெரியாரும் காட்டட்டும். அங்குநடந்தது, இங்குநடந்தது, அவன்சொன்ஞன், இவன்சொன்ஞன் என்றுமட்டும் சொல்லித் தப்பியோடுகிருர்கள் சில சமயத்தினர். (Faithcure) விசுவாசத்தினல் சுகம்கிடைத்ததென்று சில புறொட்டஸ்தாந்தபிரிவினர் சொல்லிக்கொள்ளுகிருர்கள். சாதாரணமாய் அக்குணத்தைச் சோதித்துப்பார்க்க அவர்கள் சம்மதிப்பதில்லை. ஒரேயொருசமயம், 1909-ம்ஆண்டு இத்தகைய விசுவாசகுணங்களைச் சில புறொட்டஸ்தாந்தர் ஆங்கிலேயவைத்தியசங்க பரிசோதனைக்குக் கொண்டுவந்தனர். பெரியடக்றர்மாரும், சில பாதிரிமாரும் ஐந்துஆண்டுகளாக அவர்களைப் பரிசீலனைசெய்தபின் அங்கவீனத்தினின்று எவராவது குணமானதாகத் தெரியவில்லையெனச் சாட்சியம் கூறினர்.

### வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம்

லூர்துநகரிலே புதுமைகளை ஆராய்ந்துபார்க்க வேறெங்குமில்லாத பிரமாதமான ஸ்தாபனம்ஒன்று உண்டு. 1882-ம்ஆண்டு இந்தவைத்தியஸ்தாபனம நிறுவப்பட்டது. சுகம்பெற்றவர்கள் அங்குள்ளடக்றர்மாரிடம் தங்களைக்காண்பித்துச் சுகம் — மெய்யான புதுமையாஎன்று சோதிக்கச்செய்கின்றனர். அங்கு டக்றர்மார் எச்சமயத்தினராலும், எத்தேசத்தினராலும் போகலாம். 1952-ம்ஆண்டில் ஏறக்குறைய ஆயிரம்பெரியடக்றர்மாரும், நூற்றுக்குமேற்பட்ட உதவிடக்றர்மாரும் போய்ஆராய்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் பிறசமயத்தினர். சிலர்நாஸ்திகர். இத்தாபனத்தின் தலைவர் பிறசமயத்தினரை வருந்திவருந்தி அழைத்துவருகின்ருர்.

### திருச்சபையும் புதுமைகளும்

திருச்சபை பலஅற்புதச்சுகங்களைப் புதுமையென்று ஏற்றுக்கொள்வதில்லை. ஒன்றிரண்டை ஏற்றுக்கொள்ளுமுன்னும் எத்தனை ஆராய்ச்சி! 1888-ம்ஆண்டுமுதல் 1910-ம்ஆண்டுவரை யாவராலும் கைவிடப்பட்டுக் குணமாகாதென்று பெரியடக்றர்மார் சாட்சியம்கூறிய நோயாளிகளிலே வருடம்ஒன்றுக்குச்சராசரி 135பேர் புதுமையாகக் குணமடைந்தனர்என்று பதிவாயிற்று. புதுமையாகச் சுகமடைந்தனரென்று அழைத்துவந்த வியாதிஸ்தரை வைத்தியஸ்தாபனம் சோதித்துப்பார்த்துக் குறித்துவைத்தபின், வியாதிதொடங்கிய காலமுதல் அந்நாள்வரை ஏற்பட்டகூறுகள், அவரைக்கவனித்துவந்த வைத்தியர்களின் வாக்குமூலங்கள் பார்வையிடப்படுகின்றன. அவர் தனது ஊருக்குத்திரும்பிப்போய் ஓர் ஆண்டுசென்றதும் அவரைக் கவனித்துவந்த டக்றர்மார் யாவரையும் அழைத்துச் செல்லவேண்டும். சென்ருல் இரண்டாம் சோதனை. மற்றோர்ஆண்டுசென்றும் செல்லவேண்டும். 3-ம் சோதனை. இறுதியிலே அந்தத்தாபனத்திலுள்ள டக்றர்மார் (ஏறக்குறைய முக்கால்வாசிப்பேர் கத்தோலிக்கர் அல்லாதவர்கள்) குணமடையமுடியாத வியாதி, அதிசயமாகக் குணமாயிற்றென்று அத்தாட்சிப்பத்திரம் அளிப்பார்கள்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

—(  )—

# மிகப்பெரிய கொடை

1923-ம்வருடம். புரட்டாதிமாதத்தில் ஒருசாதாரண வியாழக்கிழமை. சாதாரணநாள்என்ருலும், அன்றும் லூர்துதாயாரின் கெபியில் அநேக நோயாளர் வாத்தான் செய்திருந்தார்கள். றீம்ஸ்நகரிலிருந்து வந்திருந்த ஜூலியாவும் அந்தநோயாளருள் ஒருத்தியாவள். அவளுக்கு மாற்றமுடியாத வாதரோகமென்று வைத்தியர்கள் தீர்ப்பளித்து விட்டிருந்தனர். தூக்குங்கட்டிலில் ஜூலியாவைவளர்த்தி மகாதேவாலயத்தின் மைதானத்துள் தள்ளிக்கொண்டு செல்லும்போது நோயின் வேதனையைச் சகிக்கமுடியாமல் வீரிட்டாள் அவள்.

தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாவதற்குச் சிலநிமிஷங்களே இருந்தன. யாத்திரிகர்களின் கூட்டத்துக்கிடையே ஜூலியாவின் தூக்குங்கட்டிலுக்குஅருகில் முன்னைஞள்போர்வீரன்ஒருவன் நின்றுகொண்டிருந்தான். ஆனல், அங்கேஅவன் ஒரு யாத்திரிகனுக வரவில்லை. ஏனெனில், அவன் ஒருநாஸ்திகன். அகம்பாவத்துடன், தலையிலிருந்த தொப்பியைஎடுக்காமலும், உதட்டில் பஸ்பமாகிக்கொண்டிருக்கும் சிகறற்றுடனும் நின்றதோரணையே அவன் ஓர்நாஸ்திகசிற்பிதான்என்பதை நிரூபித்துக்கொண்டிருந்தது. அந்தப்போர்வீரனின் கைகள் ஆணவமாக அவனுடைய சட்டைப்பைகளுள் விடப்பட்டிருந்தன. அவன்முகத்தில் கர்வமும், ஏளனமும் குமிழியிட்டன. பொதுவிலே அவன் நின்றபாணியே மற்றவர்களைப்பார்த்து "முட்டாள்களே"என்று கூறுவதுபோலக் காணப்பட்டது.

தூக்குங்கட்டிலில் வளர்த்தப்பட்டிருந்த ஜூலியாவை அவன்கண்கள் கவனித்தன. "இதோஒருத்தி! முடியுமானல் இவளைச் சொஸ்தப்படுத்துபார்க்கலாம்"என்று அவன்தனக்குள்ளே கேட்டு நகைத்துக்கொண்டான்.

தொலைவில் வெண்கலமணிகள் மதுரமாகச்சப்தித்தன. அவனைச்சுற்றிவர நின்றவர்கள் இனிமையாகப் பாடினர்கள். சுற்றுப்பிரகாரம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. தொப்பியைக் கையில்எடுத்து வைத்துக்கொள்ளும்படி ஒருபணியாள் பணிவாக அவனிடம் வேண்டினன். "இல்லை, தொப்பியை நான் அணிந்திருக்கத்தான் போகிறேன்"என்று அவன்கூறியது அங்கிருந்தவர்களுக்குக் கேட்டது. அந்த இடத்தில் ஒருதொல்லையைச் சிருஷ்டிக்கவிரும்பாத பணியாள் மேலும் அவனை வற்புறுத்தவிரும்பவில்லை.

தேவநற்கருணையுடன் குருவானவர் ஜூலியாஇருந்தஇடத்தை நெருங்கும் சமயம் எல்லாரும் ஒருவேதனைக்குரலைக் கேட்டார்கள். ஜூலியாஎழுந்து உட்கார்ந்தாள். மறுகணம் எழுந்து முழந்தாளிலிருந்தாள். இப்போது அவளுக்குப் பூரணசுகம். தேவதாயார் அவளைச் சொஸ்தப்படுத்திவிட்டார்.

ஆனல், சொஸ்தப்படுத்தப்பட்டது ஜூலியாமாத்திரமல்ல. கர்வம்பிடித்த அவனதுதொப்பியை நெட்டித்தள்ளிவிடவும், ஏளனம்செய்யும் சிகறற்றை மிதித்துநசுக்கவும் தேவதாயார் அங்கு ஒருநாடகமுறையை மேற்கொண்டார் எனலாம். ஜூலியாவின் தூக்குங்கட்டிலுக்குப்பின்னலே அந்தநாஸ்திகன் தனது நடுங்குங்கரங்களில் தொப்பியை வைத்து நெருடிக்கொண்டு முழந்தாளியிருந்தான். தரையில் சிகறற்தானுக எரிந்து புகைந்துகொண்டிருந்தது.

ஜூலியா வைத்தியரின் பரிசோதனை நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட அதேசமயம் மமதையொழிந்த அந்தப் போர்வீரன் குருவானவரைத்தேடிக் கோவிலுள்ஓடினன். அவன் அவரிடம் கூறவேண்டியவை அநேகம்இருந்தன. பிரதானமாய் அவன்பெற்றுக்கொண்ட மிகப்பெரிய கொடையைப்பற்றி அவரிடம் அவன் கூறவேண்டாமா?

— A. W. J. சந்திரசேகரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதருக்காகத் துன்புறும் அனைவருக்கும் லூர்துகெபியின் பரிசுத்தகன்னிகை ஆறுதலும், திடமும் அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** சீனர்களின் சமய உணர்ச்சியை நாஸ்திகலோகாதயம் அழியாதிருக்கும்படியாக மன்றாடிக் கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
மாசிமாதம் 6-ந் திகதி


## புதியகுருப்பிரசாதிகள்

எமதுநாட்டில் மாத்திரமல்ல, உலகின் சகலநாடுகளிலுமே கத்தோலிக்க குடும்பங்கள்மத்தியில் குருத்துவ அழைத்தல்விஷயமாய் மிகுந்தஅருட்சி எழுந்திருக்கின்ற இக்காலத்திலே எமதுமேற்றிராசனத்தைச்சேர்ந்த மூன்று கத்தோலிக்ககுடும்பங்கள் மத்தியிலிருந்து முச்சுடர்களேபோன்று புதியகுருமார் மூவர் உதயமாகியிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதே. மாதாவின் சுத்திகரத் திருநாளாகிய சென்ற 3-ந்திகதியன்றுகாலை நம்மேற்றிராணியாண்டவர் அறுபதின்மருக்கு மேற்பட்ட குருமார், குருத்துவ பிறதர்மார்சமேதராய் ஆசனக் கோவிலுக்கு எழுந்தருளி வண. ஜே. பி. இம்மனுவேல் செல்வராசா, வண. எஸ். ஈ. நிக்கலஸ் குணசீலன், வண. பி. பெனற் ஏ. கொன்ஸ்ரன் ரயின் எனும் தியாக்கோன்பிறதர்மார் மூவருக்கும் குருப்பட்டம்என்னும் திருப்பட்டமருளலாயினர். அத்தருணம் கன்னியாஸ்திரிமாரும், குருத்துவமாணவர்களும், புதிய குரவர்களின் பெற்ருர், சுற்றத்தவரும், மாணவர்,மாணவிகளும், விசுவாசிகளுமாகப் பெருந்திரளானேர் கோவிலில் சமுகமாயிருந்து, ஆங்குநடைபெற்ற மனேவருட்சிக்குரிய அபிஷேகதிருச்சடங்குகளை ஆர்வத்துடன் கவனித்துப் பக்திப்பரவசமுற்று நின்ருர்கள். இந்தஅபிஷேக திருவைபவத்தாலே அன்றுதினமுதல் "இவர் ஓர்குருவானவரின் தந்தை; இவர் ஓர்குருவானவரின் தாய்" என்று பெருமையுடன் பரிவாகச் சொல்லக்கூடிய பெருந்தகைமையைப் பெற்றிருக்கின்றனர், புதியகுரவர்களின் தந்தையரும் தாயரும். ஆமாம், குருபதவியென்ருல், அதற்கும் கொடுத்துவைக்கத்தான் வேண்டும். அருந்தியாகம்புரிந்து, அருந்தவமிருந்து, கையெடாத கோவிலெல்லாம் கண்ணீரும், செபமுமாய்க் கையெடுத்துவந்து, குருத்துவ அழைத்தலின்பாதையில் கருத்தாகவழிநடத்திவந்து, இவ்வாருன செப, தப, தியாகங்கள் ஆகியவற்றின்விளைவாகத் தனதுபுதல்வரை ஓர்குருவாகக் காணும்தாய் ஈன்றபொழுதினும் பெரிதுவப்பாள்அன்ருே! அவ்வாறே தந்தையும் "இவனைப் பெற இவன்தந்தை என்ன தபஞ் செய்தானே?" என்ற புகழ்மொழிக்கு இலக்காகுவர் அன்ருே! அன்று குருப்பட்டம் பெற்றுள்ள மூவரிலும் அச்சுவேலியைத் தமதுஜனனபதியாகக்கொண்ட வண. ஜே. பி. இம்மனுவேல் செல்வராசா சுவாமியவர்கள் அப்பதிவாசர்களான வி. யோசெவ் பொன்னையா தம்பதிகளின்புதல்வர். இதுகாலவரை அப்பதிக்கண் புகழொடு தோன்றியுள்ள அநேககுருப்பிரசாதிகளைத் தமதுசுற்றத்தவராகக் கொண்டுள்ளவர். மிருசுவிலைத் தமதுஜனனபதியாகக் கொண்ட வண. எஸ். ஈ. நிக்கலஸ் குணசீலன்சுவாமியவர்கள் அப்பதியைச்சேர்ந்த எஸ். சிங்கராயர் தம்பதிகளின் புத்திரர். மிருசுவில்பதிக்கண் தோன்றிய இரண்டாவதுகுரவர் இவராவர். வண. பி. பெனெற் ஏ. கொன்ஸ்ரன்ரயின் சுவாமியவர்கள் நம் பட்டணத்திலே ஆசனக்கோவில் வீதியில் வசிப்பவர்களான பி. ஜே. கொன்ஸ்ரன்ரயின் தம்பதிகளின்புதல்வர். இவரும் தமதுசுற்றத்தவர்களாக அநேக குருப்பிரசாதிகளைக் கொண்டுள்ளவர். இப்புதியகுரவர்கள்மூவரும் யாழ்ப்பாணத் திருச்சபை உத்தியானத்திலே தேவதோத்திர வாஞ்சையுடனும், ஆன்ம இரட்சணிய அபேட்சையுடனும், அருந்தியாகங்களுடனும் நெடுங்காலம் திருத்தொண்டாற்றிப் பெருந் தேவதொண்டர்களாய் விளங்கத் திருவருள்பாலிக்குமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருளை இரந்துநிற்கின்ருேம்.

## அமெரிக்க செயற்கைச் சந்திரன்

அமெரிக்காவின் முதலாவது செயற்கைச்சந்திரன் சென்றவெள்ளிக்கிழமை இரவு 10-48 மணிக்கு வானவெளிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது பீரங்கிக்குண்டின் வடிவத்திலுள்ள இதன் நிறை சுமார் 30 ருத்தலாகும். அங்கு புளோறிடாவிலிருந்து ஓர் றெக்கெற் மூலமாக வானவெளிக்குஅனுப்பிவைக்கப்பட்டது. றெக்கெற் மேலேபறந்து சென்று நான்குநிமிஷநேரத்தில் இது கணணுக்குப் புலப்படலாயிற்று. சுமார் 6 அங்குல குறுக்களவும், 80 அங்குலநீளமுமான இந்தச் செயற்கைச்சந்திரன் 106 நிமிஷங்களுக்கு ருமுறை பூமியைச்சுற்றிவருகின்றது.

## முதல் வெள்ளி முதற் சனி

—*—

**நாளை (7-2-58) வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி–மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமை தோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிருர்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமை தோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்ருர்.

## லூர்துமாதாபேரில் பாப்பரசர் செய்தருளிய செபம்

கானகத்திலே வழிதப்பியவரைப்போல வானகத்து வழியறியாதவர்க்குச் செபதப வழியைக்காட்டியும், துன்பதுயரத்தால் வாடியவர்க்கு அற்புதமாரி வரையின்றிப் பொழிந்தும்வருகின்ற அமலோற்பவ அன்னைகன்னி லூர்துமாமரியே! உமதுஅழைப்பிற்கிசைந்து நீர் காட்சியளிக்கக் கருணைகூர்ந்த திருக்கெபியைத் தாழ்மையுடன் அண்டி வருகின்ருேம். இரக்கம்நிறைந்த இராக்கினியே! கவலைமேலிட்ட தேசமக்கள் நம்பிக்கையுடன் தேவரீருக்குச்செய்யும் வேண்டுதல்களுக்கும், சாற்றும் புகழ்ச்சிகளுக்கும் தயவாகச் செவிசாய்த்தருளும். பரலோகத்திலிருந்துவந்த தரிசனமே! மனதுகளைச் சூழ்ந்திருக்கும் தப்பறைஎன்னும் இருளை உமது விசுவாசம்என்னும் வெளிச்சத்தால் அகற்றியருளும். வேலிசூழ்ந்த செபப்பூங்காவே! சோர்ந்தமனதுகளை நம்பிக்கைவரத்தினுல் உற்சாகப்படுத்தியருளும். சீவியசலத்தின் வற்ருதஊறணியே! வரண்ட இருதயங்களை அன்புவெள்ளத்தால் குளிர்ச்சியடையச் செய்தருளும்.

தாயே! நாம் உமதுபிள்ளைகள். எமதுகவலையில் தேறுதல்நீரே. ஆபத்தில் அபயம்நீரே. போராட்டத்தில் செயந்தரவல்ல பலம்நீரே. ஆகவே உமது திருச்சுதன் யேசுக்கிறீஸ்துநாதரை நாம் நேசித்துச் சேவிக்க உதவி புரிந்து அதனுல் உமது மோட்சசிம்மாசனத் தண்டையிலே நித்தியபேரின்பத்தை நாம் அடையப் பேறுபெற்றவர்களாச் செய்தருளும். ஆமென்.

# லூர்து-மாதாவின் நகரம்

*M. J. M.*

இவ்வாண்டு மாசி 11-ந் திகதியன்று லூர்துகெபியிலே தேவ அன்னை காட்சியளித்த நூறுமாண்டுநிறைவுவிழாவாகும். அதனுல் உலகின் பல்வேறு பாகங்களிலுமிருந்து இவ்வருடம் அதிகமான திருயாத்திரிகர்கள் லூர்துநகர் செல்வார்கள். எமது நாட்டிலிருந்தும் அங்குசெல்ல யாத்திரிகர்கள் ஆயத்தஞ்செய்கிருர்கள். ஆகவே, லூர்து கெபித் தரிசனத்தையும், அதன் உட்கருத்தையும்பற்றிச் சிறுகஆராய்வாம்.

லூர்துபதிசெல்லும் ஒவ்வொருவருக்கும் அது மரியாயின்நகரம் என்பது மனதில் நன்றுகஉறுத்தும். அங்கு யாத்திரைசெய்வார் அனைவரும் மரியன்னையின் பிரமாணிக்கமுள்ளபிள்ளைகளேஎனலாம். ரோமைஎன்ருல் அது சரித்திரப் பெருமைவாய்ந்த நகரம். புராதன கலைப்பொக்ஷங்கள் அங்கு நிறையஉள்ளன. வானளாவிய மகா ஆலயங்கள் அங்கு ஏராளமாய்உண்டு. அது வேதசாட்சிகள்சிந்திய குருதியால் புனிதமாக்கப்பெற்ற புண்ணிய பூமி. அத்துடன் கிறீஸ்துநாதரின் பிரதிநிதியாயிருந்து உலகமக்களுக்கு வழிகாட்டுகிறவரும், "ஊருக்கும், உலகத்துக்கும்" ஆசியளிக்கக்கூடியவருமான பரிசுத்தபாப்பரசர் வதிகின்ற பதியும் அதுவேயாகும். ஆயினும், ரோமையிலுள்ள நூதனங்களைப் பார்த்துவிட்டுக் கவலையின்றியே புறப்பட்டுப்போகலாம். ஆனல், லூர்துபதியிலோ எல்லாவற்றையும் பார்வையிட்டபின் அதை விட்டுப்பிரிய மனதையே பலவந்தஞ் செய்யவேண்டியிருக்கும். அங்கேயே தங்கிவிடுவது நலமெனத் தோன்றும். ஆம், லூர்துபதியானது எமது இல்லத்திலேயே இருப்பதுபோன்ற உணர்ச்சி தருகின்றது. ஒருமுறை அதைத்தரிசித்தபின் அங்கு திரும்பவருவது எந்நாளோ என்ற தணியாததாகம் ஏற்படுகிறது.

லூர்துபதியானது மிகச்சில சொந்த ஊரவர்களைக்கொண்ட ஓர்நகராயினும், அங்கு எப்போதுமே சனக்கூழாம் நிறைந்து தேங்கியிருக்கும். அங்குவிசுவாசமே ஓர்உருவெடுத்து இருக்கிறதெனக் கூறலாம். அம்மட்டா! மாதாவின்பக்தி சுடர்பெற்றுவிளங்கும் ஓர் தலமென்று அதனைச் சொல்லவேண்டியதில்லை. மாதாஇருக்கிறு என்பதற்கு லூர்துநகராம் ஓர்நிச்சயமான எடுத்துக்காட்டாகும். மாதாவிடம் வரம்பெற்றவர்களை அங்கு நாம்காண்கிருேம். இவர்களிற்பலர் நன்றிசெலுத்தும் நோக்கமாக அங்குபோனவர்கள். வேறுசிலர் வரங்கேட்கும்படியாக மாதாவைத்தேடிப் போனவர்கள். இவர்கள் [illegible]த்தை அதிகமாக ஈர்கின்ருர்கள். ஏனெனில், இவர்கள் மாதா தங்களுக்குஅருள்புரியக்கூடுமென்ற அசைப்பதநம்பிக்கையோடு சென்றவர்கள்அல்ல. அன்னைமரி தங்களுக்குநிச்சயமாய் வரம்அருளுவார் என்ற உறுதியானநம்பிக்கை அவர்களுடையபேச்சில் நர்த்தனம்புரிகிறது. ஆயிரம், இரண்டாயிரம் காதவழிதூரம் கடந்துசென்ற வியாதிக்காரரும்உண்டு. இந்தக்கஷ்டமான பயணத்தை மேற்கொள்ளவேண்டாமென நாம் அவர்களைத்தடுத்திருப்போம். ஆனல், அவர்கள் இயலாததொன்று நிச்சயமாகக் கைகூடுமென்று எதிர்பார்க்கிருர்கள். அவர்களுடைய கற்றூணைப் போன்ற அசையாதநம்பிக்கையே எங்களனு தளம்பும்விசுவாசத்துக்குத் தாபரமாகிறது.

மரியாயைப்பற்றிய சத்தியம்மாத்திரமல்ல, கத்தோலிக்க விசுவாசசத்தியங்கள்எல்லாம் தத்தளிப்பின்றி அங்குஏற்றுக்கொள்ளப் படுகின்றன. லூர்துபதிக்குச் செல்லுகிறவர் அவிசுவாசியாய்த் திரும்பமுடியாது. கடவுள்உண்டென்ற உண்மைக்குக் கட்டுப்பட்டேயாகவேணடும். திவ்வியநற்கருணையில் யேசுநாதர்வீற்றிருக்கிருர் என்றஉண்மைக்கு அங்குசான்றுகள் அநேகம் உண்டு. சற்பிரசாதங்கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டபின் கட்டிலைவிட்டுக் குதித்தெழுந்து கோஷமிட்டுக்கொண்டு நற்கருணைநாதரை ஆராதிப்பவர்களைக் காணும்பொழுது எம்முடையவிசுவாசமும் உறுதியடைகிறது. லூர்துபதியில் நாமெல்லாம்நண்பர்கள். அங்குமட்டும்தான் அருகில்நிற்பவருடைய தோளில் தட்டிச் சுற்றுப்பிரகாரம் எப்பொழுது ஆரம்பமாகுமென்ருே, எமது நாவிற்கினியஉணவு எங்குகிடைக்கலாமென்ருே கேட்கமுடியும். இந்தக்கேள்விகளை வேறிடங்களிலும் கேட்கலாம்தான். ஆயினும், வினவப்பட்டவன் மிக ஆவலோடு விடையிறுக்கவும், இடத்தைக் காட்டுவதற்குப்பதிலாகக் குறித்தஇடத்துக்கு எம்மைஅழைத்துச்செல்லவும் ஆயத்தமாய்இருப்பது இங்குமட்டுந்தான்.

பிறவிடங்களிலே புகையிரதங்களிலும், பஸ்வண்டிகளிலும் பிரயாணம் பண்ணுகிறவர்கள் தங்களையறியாத இறுமாப்புடன் செல்வார்கள். லூர்துபதியிலோ அப்படியல்ல. இந்தச்சூழல் ஒவ்வொருவரும் தனது உண்மைச் சொரூபத்தை மாத்திரம் காட்டப்பண்ணுகிறது. அங்கு செல்லுகிறவர்கள் ஸ்பானியராயோ, பிறேசிலியராயோ, ஆங்கிலேயராயோ, ஜப்பானியராயோ எவராயும் இருக்கலாம். ஆயின் அங்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### லூர்துபதிகாட்சிகளின் ஆரம்பம்

அன்று 1858-ம்ஆண்டு மாசி 11-ந் [illegible]கதி. 14 வயதுச்சிறுமியான பெர்ன[illegible]தெத் தனதுபெற்ருரது கேள்வியின் பேரிலே விறகுபொறுக்கிவருமாறு மரி[illegible]யைஎன்ற தனது சகோதரியோடும், ஜான் அபடீஎன்ற மற்ருெரு சிறுமி[illegible]யோடும் காபுஆற்றங்கரை செல்கின்ருள். ஆற்றைக்கடக்க ஆயத்தப்படுகின்ருள். அப்போது புசலடித்துக் கொண்டு வருவதுபோல் திடீரென ஓர் பெருஞ்சப்தம் அவள்காதில் விழுகிறது. நாலாபக்கமும் சுற்றிப்பார்க்கின்ருள். ஆற்றங்கரையில்நின்ற மரங்களில் ஒன்றும் அசையவில்லை. ஆனல், அவள் நின்ற இடத்துக்குச்சமீபமாக மசபியேல்என்ற மலைச்சாரலிலுள்ள கெபி ஒன்றின் வலதுபக்கமாக நின்ற முட்செடிஒன்றுமாத்திரம் கடுங்காற்றினல் அடிபடுவதுபோன்று அசைந்துகொண்டிருக்கிறது. மேலும்அவள் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தக்கெபியின் மேலுள்ள பொந்திலிருந்து பொன்னிறமான ஓர்முகில் வெளிப்படவே, நடுவில் ஓர்ஸ்திரி காணப்பட்டாள். "அந்த ஸ்திரி அழகும், இளமையும் வாய்ந்தவள்; அத்துணை அழகுள்ள ஓர்ஸ்திரியை ஒருபோதுமே நான்கண்டதில்லை; ஓர்வெண்மையான அங்கியைத்தரித்து ஓர்நீலவர்ண இடைக்கச்சு அணிந்திருந்தாள்; அதன்தலைப்புகள் ஏறக்குறைய நிலத்தைத் தொடுவனவாய்த் தொங்கிக்கொண்டிருந்தன, அவள் என்னைப்பார்த்துப் புன்சிரிப்புக்காட்டி, [illegible]யப்படாது கிட்டவரச்சொல்லிச் [illegible]சைக்கினைகாட்டினள்" என்று பெர்ன[illegible]தெத் இந்தக்காட்சியைப்பற்றி வர்ணித்துக்கூறியிருக்கின்ருள். இதுவே பெர்ன[illegible]தெத்துக்கு மாதாஅருளிய முதலாவது [illegible]ட்சியாகும். இதைத்தொடர்ந்து [illegible]ட்டும்மீட்டும் அவளுக்குப்பதினேழு [illegible]ட்சிகள் அருளப்படலாயின.

3,000குருமாரும், மற்றும் 1,00,000 யாத்திரிகர்களும் கூடியிருந்தசமுகத்திலே சம்பிரமமாக அபிஷேகஞ்செய்யப் படலாயிற்று. அப்போது பெர்னதெத்அம்மாள் கன்னிகாமடத்தில் சஞ்சரித்திருந்து, மூன்றுவருடங்களின்பின் காலஞ்செல்லலாயினள். லூர்துபதியிலுள்ள திருச்செபமாலைக் கோவில் காட்சிகள் அருளப்பெற்ற 25-ம்ஆண்டு நிறைவாகிய 1883-ம் ஆண்டுஆரம்பிக்கப்பெற்று 1901-ம் ஆண்டு அபிஷேகஞ்செய்யப்பெற்றது.

### பாப்பரசரும் லூர்துபதியும்

இற்றைக்கு 23வருடங்களின்முன் அர்ச். பெர்னதெத்அம்மாள் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்று இருவருடங்களின்பின் — அதாவது 1935-ம்ஆண்டு 11-ம்பத்திநாதபாப்பானவர் கருதினல் பச்செல்லிஆண்டவரை—தற்போதைய 12-ம்பத்திநாத பாப்பரசரை இரட்சணிய யூபிலி வருடத்தின் முடிபுவைபவங்களுக்குத் தமது பிரதிநிதியாக லூர்துபதிக்கு அனுப்பி வைத்தார். கருதினல் பச்செல்லிஆண்டவர் லூர்துபதி ஸ்ரேஷன்போய்ச் சேர்ந்து, அதன்மேல் ஆறுபரிகள்பூட்டிய ரதம்ஒன்றிலே நகரினூடாகப் பவனிசென்று மேற்றிராணியாரின் மாளிகையை அடைந்தார். அவர் அப்போதுபேசியது இன்றுமே செல்லக்கூடியதே. அதாவது, "இங்கே ஒப்புக்கொடுக்கப்படும் செபங்களின் நோக்கம் யாதெனில், உலகத்தை வருத்திக்கொண்டிருக்கின்ற பீடைகள் விரைவிலே ஒருமுடிவுக்குவரும்படியாகவும், மனிதவர்க்கத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற ஆபத்துகள் அகலும்படியாகவும் தேவபராமரிப்பை இரந்துகொள்வதேயாகும்."



வண. இயூஜின் குருசோ பிறதர் அவர்கள்
இறைவனடி சேர்ந்த

## பத்தாவது வருட நினைவு

**தோற்றம்: 22-2-1871** **மறைவு: 13-2-1948**

பக்திக் கூட்டங்களின் ஸ்தாபகரும், பரிபாலகருமாயிருந்து அரும்பெருந் தொண்டாற்றிவந்து மரணத்திரையில் மறைந்த வண. E. குருசோ பிறதர் அவர்கள் பரமபதம் அடைந்த பத்தாவது வருட நிறைவு ஞாபகதினம் 13-2-58 வியாழக்கிழமை வருகின்றது. அன்று காலை அன்னவரின் ஆன்ம சாந்திக்காக ஆசனக் கோவிலிலே காலை 6-15 மணிக்கு ஓர் துக்கப் பாடற்பூசை நடந்தேறும்.

அவ்வமயம் வண. பிறதர் அவர்களின் ஞானப் பிள்ளைகளும், அன்பர்களும் சமுகந்தருமாறு பரிவாகக் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

**மாணபரியந்தம் எம்மை நேசித்தார்;**
**சீவியத்தில் நாம் அவரை நேசித்தோம்;**
**மாணத்தின் பின் மறவாதிருப்போமாக.**

# லூர்துபதி வரலாறுகள்

### லூர்துபதி மகாதேவாலயம்

லூர்துபதியில் ஓர்கோவில் கட்டப்படவேண்டுமென்று தேவதாயார் [illegible]காட்சிஒன்றில் பெர்னதெத்கிடம் ஓர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அது 1866-ம்ஆண்டு முதன்முதலாக நிறைவேற்றப்பட்டது. அப்போது நிலவறைக்கோவில் பூர்த்தியடைந்துபெரிய பாடற்பூசையுடன் திறந்துவைக்கப்படலாயிற்று. அர்ச். பெர்னதெத் அம்மாள் அப்போது எவருமே கவனிக்கமாட்டார்களெனநம்பி "மரியாயின் பிள்ளைகள்"மத்தியிலே அங்குநின்ருள். ஆனல், கோவில்திறப்புவிழா வைபவங்கள்முடிந்ததும் சனக்குழாம் அவளை இன்னரென்று கண்டுபிடித்துவிட்டது. "அர்ச்சியசிட்டவள்! அர்ச்சியசிட்டவள்!" என்று ஆர்ப்பரித்தது. பெர்னதெத்துடன்நின்ற கன்னியாஸ்திரிமார் அவள்நெரிபடாமல் தடுத்துக்காத்துவைக்குமாறு அவளுக்குமெய்காப்பாளராக அணிவகுத்துநிற்கவேண்டியதாயிற்று. அதன்மேல் உடனேதானே உந்நதகோபுரத்துடன் கூடிய மகாதேவாலய திருப்பணி ஆரம்பமாயிற்று. இது 1870-ஆண்டு பூர்த்தியடைந்தது. பின்னர் 1876-ம் ஆண்டு ஓர்கருதினலும், 35அதிமேற்றிராணிமார் மேற்றிராணிமாரும்,

### செபமாலைச் சினிமாக் காட்சிகள்

குடும்பசெபமாலைப் படையணியின் ஞானத்தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன்சுவாமிகள் தமது படையணிக்கென்று சமீபத்திலே தயாரித்துள்ள செபமாலையின் பதினைந்து தேவரகசியங்களின் சினிமாப்படங்கள் நூற்ருண்டுவிழா ஆரம்பமாகும் தினத்துக்குமுந்திய 8-ம், 9-ம், 10-ந் திகதிகளிலும் வருடமுழுவதும் வருகின்ற சனிக்கிழமைகளிலும் லூர்துபதியிலே காண்பிக்கப்படவிருக்கின்றன. அர்ச். பெர்னதெத்அம்மாளின் சீவியவரலாற்றை எடுத்துக்காட்டும் மற்ருேர் சினிமாப்படமும் அங்கு காண்பிக்கப்படும். இது தற்சமயம் கலிபோர்னியா[illegible]லே பரீஸ்நகரில் தயாரிக்கப்பட்டுவருகிறது.

### புதிய மகாதேவாலயம்

உலகின் மகாப்பிரமாண்டமான ஆலயங்களில்ஒன்ருய் லூர்துபதியிலே நிலமட்டத்தின்கீழ் கட்டியெழுப்பப்பட்டுவரும் அர்ச். பத்தாம்பத்திநாதரின் மகாதேவாலயமானது இன்றைய உலகில் சாதித்தற்கரிய மகாதுணிகரமான அரிய சித்திரச்சிற்ப வேலைப்பாடாகும். இது ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தின் நாலில்மூன்று பங்கு விஸ்தீரணமுடையது. இருபதினாயிரம்மக்களைக் கொள்ளக்கூடியது. தூண்கள்எதுவும் இல்லாதது. மழைமுதலாம் காரணங்களையிட்டு வெளியிலே தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரங்களை நிறுத்திவிடவேண்டிவருமோ என்றஅச்சம் இனிமேல் எழமாட்டாது. தற்போது அவைகளை இந்தப் புதிய மகாதேவாலயத்துள்ளேயே நடத்திக்கொள்ளலாம். நோயாளர்களைச் சில்லுவண்டிகளி[illegible] அங்கு சரித்துவிடலாம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

குடும்பசெபமாலைவழியாய் எமதுமன்[illegible]ட்டைச் சதாசகாயமாதா கேட்டருளி[illegible] திரும்பத்திரும்பவந்த வருத்தம் அற்புதமாய் மறைந்தொழிந்தது. எமது திருத்தாயின் பரிசுத்த நாமம்எங்கும் புகழப்படுவதாக.

[illegible]ரையூர் க. வஸ்தியாம்பிள்ளை

### லூர்துபதியும் புதுமைகளும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

#### எல்லாம் முடியவில்லை

இந்த ஸ்தாபனத்தின் பத்திரங்கள் யாவும் பரீஸ்நகரிலுள்ள தேசியவைத்தியக் குழுவினரிடம் அனுப்பிவைக்கப்படும். அவர்கள்பரிசோதித்து அந்தப் பத்திரத்தை ஓட்டியோ, வெட்டியோ வேருெருபத்திரம்அளிப்பர். சாதகமாயிருந்தால் திருச்சபைஅதிகாரிகளிடம் அனுப்பப்படும். நோயாளியின் மேற்றிராசனத்திலுள்ள வேதசாஸ்திரிகளும், தர்க்கசாஸ்திரிகளும ஆராய்ந்துபார்த்து இது புதுமையா, புதுமையல்லவா என்று தீர்மானிப்பார்கள். என்ன நீண்ட சோதனை! ஆம், உலகமே மறுக்கமுடியாத ஒருபுதுமையைத் திருச்சபை நிலைநாட்டினல் அந்தஒரு புதுமையே திருச்சபையின் தெய்வீகத் தன்மைக்கு நிச்சயமான சான்றல்லவா? உடலுக்குவரும் குணத்தைவிட ஆத்துமத்தில் நடக்கும் அற்புதமாற்றங்கள்தான் அனந்தம்.

**சிலபுதுமைகள்:** பெல்ஜியதேச குடியானவன் பீற்றர்-தெரடர் ஒரு மரம்விழுந்து அவன்கால் முறிந்தது. எலும்புக்கும், எலும்புக்கும் தொடர் பின்றிப்போயிற்று. அந்தஎலும்பை வெட்டிஎடுத்துவிட வேண்டுமென்று டக்றர்மார் எவ்வளவோசொல்லியும் ஏழாண்டுகளாக அவன் இசையவில்லை. அதற்குப்பின் நாற்காலியில்வைத்து, லூர்துக்குத் தூக்கிச்சென்றனர். அங்கே பூரணசுகம். ஆசனத்தை விட்டெழுந்தான். அக்ஷணமே மூன்று மைல்நடந்தான். போலெத் மார்ஜேர்என்பவள் குழந்தைப்பருவத்திலிருந்தே பாயும்படுக்கையும்தான். அவளுக்குவியாதி ஒன்றல்ல, பல. அவள் அனுபவித்ததோ அகோரவாதனை. 22-ம்வயதில் பிணம்போலப் படுக்கையில்கிடந்தாள். ஒருகன்னிகாஸ்திரீ அவள்நாவில் லூர்துதீர்த்தத்தில் சில [illegible] மறுநாட்காலை [illegible]எழுந்தாள், உடுத்திக் கொண்டாள். அன்றுமுதல் மற்றவர்களைப்போல நோயற்ற வாழ்க்கை.

அமெரிக்காவில் ஒருசிறந்த பிரபல டக்றர். நாஸ்திகர். யாவரிலும் பெரும் நாஸ்திகர். அலெக்சீஸ் காரெல் என்பது அவர்பெயர். லூர்துதிருச் சேத்திரத்தில் புதுமையான குணங்கள் என்று சொல்லுகிருர்களே, அதில் என்னசூழ்ச்சி, ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்பது அவரது ஒரு நாளைய அபிலாஷையாகும். 1903-ம் ஆண்டு அவைகளைச்சோதிக்க லூர்து நகருக்குப்பயணமானர். பிரயாணத்தின்போது சாகும்தருணத்திலிருந்த ஒருநோயாளிக்கு உதவிசெய்ய அழைக்கப்பட்டார். மரியாயிஎன்பவளுக்கு வயிற்றையும், நெஞ்சையும் பிரிக்கும் இலேசானசவ்வில் கொடிய சயம. அவள்உயிரோடு லூர்துபதி போய்ச்சேரமாட்டாள்என்பது யாவரதும்எண்ணம். காரெலுக்கும் அதே அபிப்பிராயம். அவள்வயற்றில் மலையைப்போல ஒருபெரியகட்டியில் வைத்து அவனுக்கு நல்லவாய்ப்பு. சேத்திரத்தில் அவளைப் படுக்கவைத்த இடத்திலே பாராக்கொடுத்துநின்ருன். பிற்பகல் 230மணிக்குத் தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்தின்போது, அவள்சிரசின்மேல் கதிர்ப்பாத்திரத்தைக் குருவானவர் வைத்தாரோ, இல்லையோ அதேவினடியில் அவள் கண்களில் புத்தொளியும், உயிரும் பிறந்தன. மூன்றுமணிக்குள் சன்னம்சன்னமாய் கட்டிமுழுதும் அமுங்கிவிட்டது. அவளுக்குப் பூரண சுகம். வைத்தியபரிசோதனை ஸ்தாபனத்துக்கு அவள் கூடவேசென்று எல்லாவற்றையும் காரெல்கவனித்தார். சோதித்தார். தெளிந்தார். மனந்திரும்பினர். அதைப்பற்றி ஒருநூல் எழுதினர். லூர்த்துஅன்னையின் கிருபைபெரிதா, அவளது அருமையான ஆற்றல்பெரிதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்துமாதாவின் பதினெட்டுக் காட்சிகள்

பழையன கழிந்த புதியன புகுந்தாலும் லூர்துபதிமாருது. அமலஅன்னை நூறு ஆண்டுகளுக்குமுன் ஏற்படுத்திய வேண்டுதல், ஸ்துதி, ஆராதனைசேர்ந்த அமைப்பு என்றுமேநிலைத்திருக்கும். எமதுஆண்டவளின்நகரம ஓர்ஞாபக சின்னம் மாத்திரமன்று, அஃது வளர்ந்துகொண்டிருக்கும் பட்டணம். அது உலகின்அட்டதிக்குகளிலுமுள்ள விசுவாசிகள் திவ்வியகர்த்தரையும், அவருடையதிருத்தாயாரையும் தகுந்த விதமாய்வாழ்த்திவணங்க அவசியமான ஞானபலத்தில்மிகுந்து வளம்பெற்றுக் கொண்டே வருகின்றது. ஆகவே, லூர்துஎன்னும் அருட்பதியைத்தந்த இறைவனுக்குத் துதிசெலுத்தும் நூற்ருண்டுவிழாவிற்குரிய ஆயத்தங்கள பெருமிதமாக நடந்துகொண்டிருக்கும் இந்தவேளை அன்னையின்பட்டணத்தில் யந்திரங்களின் இரைச்சலும், கோடரி சம்மட்டிகளின் குமுறலும் நிறைந்திருப்பது ஆச்சரியமன்று.

இந்தயூபிலிவருடத்திலே, எண்பது லட்சம்விசுவாசிகள் லூர்துபதிசெல்ல ஆயத்தப்படுகின்ற இச்சந்தர்ப்பத்திலே அங்குள்ளசத்திரங்கள், சாவடிகள் விசாலமடைகின்றன, சிறப்பாக நில மட்டத்தின்கீழுள்ள ஆர்ச் 10-ம்பத்தி நாதரின் மகாதேவாலயகட்டடம் பூர்த்தியடைகின்றது. லூர்துபதியில் நடந்தேறவிருக்கும் வைபவங்களுக்குத் தலைமைதாங்கும்படி நியமனம்பெற்றிருக்கும்பரிசுத்தபாப்பரசரின் பிரதிநிதியும், வெனிஸ்மாநகரின் பத்திறியாக்குவுமான கருதினல்ரேங்கல்லிஆண்டவர் இம்மகாதேவாலயத்தைப் பங்குனி 25-ம்நாள் அபிஷேகஞ்செய்துவைப்பார்.

எமதுஆண்டவள் 18முறை பெர்னதெத்துக்குத் தரிசனை அளித்தருளினர். 1858-ம்ஆண்டு மாசிமாதம்11-ந் திகதி லூர்துபதியிலுள்ள சிற்ருற்றுக்கு அருகாமையிலிருக்கும் குகையில பெர்னதெத் முதன்முறையாக மாதாவைத்தரிசித்தாள். அதேயிடத்தில் பிந்தப் 17முறை அவள் மாதாவின் தரிசனைபெற்ருள். அத்தரிசனைகளின் சுருக்கமானவரலாறு வருமாறு:

மாசி **11**—பெர்னதெத் தனதுசகோதரியுடனும், மற்றோர்சிறுமியுடனும் விறகுபொறுக்குமாறு மசபியேல் குகைக்குச் சென்ருள். அங்கு தான் வெள்ளைஅங்கிதரித்து, நீலஇடைக்கச்சு அணிந்திருந்த "ரூபவதியான அம்மாளை" முதன்முறையாகக் கண்டாள். தேவதாய் குறுநகைபுரிந்து அவளுக்குச் சிலுவைஅடையாளம் போடக் கற்றுக்கொடுத்தாள்.

மாசி **14** — பெர்னதெத் இரண்டு நாட்களாகக் குகைக்குப்போகவில்லை. ஆனல், இன்று அங்கு சென்ருள். அன்றுதினம் ஓர் ஞாயிற்றுக்கிழமை. ஆசிநீர்கொண்டுசென்று மாதாவைக் கண்டதும் அதைத்தெளித்தாள். மாதாஅதைக்கண்டு புன்னகைபுரிந்தார்.

மாசி **18** — இன்றுமாதா முதன்முறையாகப் பெர்னதெத்துடன் சம்பாஷித்தார். "இரண்டுவாரங்களுக்கு நீ நாள்தோறும் இங்குவாவேண்டுமென நான்விரும்புகிறேன். நான் உன்னை இவ்வுலகில்அல்ல மறுஉலகிலேயே இன்பமாயிருக்கச்செய்வதாக வாக்குப் பண்ணுகிறேன். இவ்விடத்திற்கு மக்கள் வரவேண்டுமென்று நான்விரும்புகிறேன்" என்று பெர்னதெத் அம்மாளுக்கு மாதாகூறினர். அமைச்சல் நிறைந்த பெர்னதெத் "என்பெற்ருேர் உத்தரவுதந்தால்" வருவதாகக் கூறினள்.

மாசி **19** — இன்றுதரிசனம் ஒரு மணித்தியாலமாக நடைபெற்றது. இடையிலே பெர்னதெத் புன்சிரிப்புக் காட்டினள். சிலுவைஅடையாளம் வரைந்தாள். தலைகுனிந்து வணங்கினள்.

மாசி **20** — இன்று பெர்னதெத்துடன் அவள்தாயும் குகைக்குச் சென்ருள். மாதா பிள்ளைக்குச் சொல்லுச்சொல்லாக அவளுக்குமாத்திரமே ஒருசெபம் கற்றுக்கொடுத்தாள்.

மாசி **21** — இன்று திரளானசனம் வந்தது. மாதாவின்வதனம் துக்கத்தால் வாடியிருப்பதைக்கண்ட பெர்னதெத் அதன்காரணத்தை வினவினள். "பாவிகளுக்காக மன்ருடு" என மாதா விடைபகர்ந்தார்.

மாசி **23** — இன்று மாதா பெர்னதெத்துக்கு மூன்று இரகசியங்களைக் கூறினர். அவைகள் ஒருவருக்கும் ஒருபோதுமே வெளிப்படுத்தப்படவில்லை.

மாசி **24** — இன்று பெர்னதெத் குதூகலமான முகத்துடன் காணப்பட்டபோதிலும் சடுதியாக அவளுடையமுகம் குறுவியது. குகையை நோக்கி முழந்தாளில்நடந்துசென்ருள். பின்பு சனங்களைப்பாாத்துத் "தபம், தபம், தபம்" எனக் கூறினள்.

மாசி **25** — இன்று பெர்னதெத் ஏதோ கேள்விகள் கேட்பவளைப் போன்று மாதாவைப்பார்த்தாள். பின்னர் எழுந்து குகையின் இடதுபக்கத்துக்கு நடந்துசென்ருள். "ஊற்றிலிருந்து குடி; அததால் முகத்தையும் கழுவு" என்று மாதா அவளுக்குக் கூறினர். நீர்ச்சுனையைக் காணுத பெர்னதெத் ஆற்றைநோக்கி நடக்க, மாதா அவளைத் திரும்பஅழைத்து இடத்தைக் காட்டினர். அவள் நிலத்தில் ஓர்சிறுகுழி தோண்டினள். ஒரு கிழமைக்குள்ளாக அந்நீரூற்றிலிருந்து இன்றுபோல 27,000 கலன் தண்ணீர் சுரந்தது.

மாசி **26** — இன்று பெர்னதெத்தை நிலத்தைமுத்திசெய்யும் படியும், தபஞ்செய்து பாவிகளுக்காக மன்ருடும்படியும் மாதா கற்பித்தார்.

மாசி **27** — இன்று அவ்விடத்தில் ஓர்ஆலயம் கட்டும்படியாகச் சுவாமியாருக்கு அறிவிக்க வேண்டுமென்று பெர்னதெத்துக்கு மாதா சொன்னதாகக் கண்கண்டஒருசாட்சி கூறுகிருர்.

மாசி **28** — இன்று பெர்னதெத்துக்கேயுரிய பலஇரகசியங்களை மாதா வெளிப்படுத்தினர்.

பங்குனி **1** — இன்று பெர்னதெத்தைப் பின்பற்றி அங்கு சென்றிருந்த சனங்கள் மாதாவைநோக்கித் தங்கள் செபமாலைகளை ஏந்திப்பிடித்தார்கள்.

பங்குனி **2** — இன்று குருமாரிடஞ்சென்று ஓர்செய்தி அறிவிக்கும்படியாக மாதா பெர்னதெத்தைக் கேட்டுக்கொண்டார். மக்கள் அவ்விடத்துக்கு ஊர்வலமாக வரவேண்டுமென்பது அன்று மாதா தெரிவித்த செய்திகளில் ஒன்ருகும்.

பங்குனி **4** — இன்று ஏராளமான சனங்கள் பார்த்திருக்கப் பெர்னதெத் ஒருமணித்தியாலமாகப் பரவசநிலையில் செபித்துக்கொண்டிருந்தாள்.

பங்குனி **25** — மாதா மங்கள வார்த்தைகேட்ட இத்திருநாளன்று பெர்னதெத் அவருடைய பெயரை அறிவிக்கும்படி அவரிடம் மூன்று முறை கேட்டாள். மாதா மறுமொழியாக: "நாமே அமலோற்பவம்" என விடைபகர்ந்தார்.

சித்திரை **7** — இன்று "மெழுகுவர்த்தி அற்புதம்" நடந்தேறியது. பெர்னதெத் தனது பெரிய மெழுகுவர்த்தியை நிலத்தில் தொடவைத்து இருகரங்கள[illegible] கொண்டிருந்தாள். வர்த்திச்சுடர் எரிந்துஎரிந்து பொத்திய கையடிக்குக் கீழ் சென்றது. ஆயின், நெருப்பு அவள் கையைச் சுட்ட அடையாளம் ஒன்றுமேயிருக்கவில்லை.

ஆடி **16** — கார்மேல் மாதாவின் திருநாளாகிய இன்று இறுதிமுறையாக [illegible] தரிசனம்கொடுத்தார்.

# வாழ்க! லூர்த்து நாயகி

1. மலர்தலை உலகு மகிழ்ந்திட லூர்து
    மலைக்கெபி வந்தவளே!
  மாசகல் தேசஸ்வி ளங்கவெண் ணுடையை
    மாண்பெனப் போர்த்தவளே!
நிலமிசை கற்பினைத் தலைமிசைக் கொள்கென
    நீலக்கச் சார்த்தவளே!
  நேசத் திருச்செப மாலை கரத்தினில்
    நிலவிட நின்றவளே!
உலருகற் பாறையிற் குலவுமுள் ரோசினை
    உறுத்துப தத்தினளே!
  ஓதுமெய்ஞ் ஞான சௌந்தரி யத்துடன்
    ஓர்ந்தருள் கூர்ந்தவளே!
நலவம லோற்பவ நாயகி! தாய்மரி
    நற்ருள் வழுத்துவமே!
  ஞான மனேகரி தீனத யாபரி
    நற்ருள் வழுத்துவமே.

2. தேமது ரம்பெறு நாமம் புனைந்தருள்
    செய்திடு மாமரியாள்
  திக்கெட்டும் வந்திடும் இக்கட்டி யாவுமே
    தீர்த்திடுஞ் சிந்தனையாள்
காமக் குரோ கமோ டாமெப் பவங்களும்
    கட்டுவி லங்கறுப்பாள்
  கண்ணிய ஏழைநற் பெண்ணினுக் காய்ப்பல-
    காட்சியு வந்தளித்தாள்
சேமநல் லூற்றினைத் தாமேயுண் டாக்கிய
    செப்பரும் அற்புதத்தாள்
  தேவனின் அன்னையைக் காவலின் கன்னியைச்
    சிந்தைசெய் தேற்றிடுவோம்
நாமம லோற்பவம் என்றருள் நாயகி
    நற்ருள் வழுத்துவமே
  ஞான மனேகரி தீன தயாபரி
    நற்ருள் வழுத்துவமே

3. நீரினை நீக்கிய நெற்பயிர் அற்பமும்
    நின்று நிமிர்ந்திடுமோ
  நேர்வழி தப்பிய பார்வை பெருப்பிள்ளை
    நீள்குழி வீழாதோ
பாரினில் ஓர்தரு பற்றிப்ப டர்ந்திடாப்
    பைங்கொடி வாடாதோ
  பார்த்திடத் தனிமர மேறிக்கை விட்டவர்
    பாட்டினைக் கேளீரோ
சீரினிற் பெற்றெடு தாயைக்கை விட்டவர்
    சென்மமும் அப்படியே
  செப்புவ தென்பல முப்பொழுது மவள்
    சேவடி சென்னிவைத்தே
நாரினை நன்மணம் ஊட்டுபொற் பூங்குழல்
    நாயகி வாழ்த்துவமே!
  ஞான மனேகரி தீன தயாபரி
    நற்ருள் வழுத்துவமே!

"ஞானி"

பருத்தித்துறை,
4- -58.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அண்மையில் எற்பட்ட பெருவெள்ளத்தின்போது எனது தந்தையாரைப்பற்றியும் மற்றும் இனத்தவர்களைப்பற்றியும் ஏதும்தகவல் தெரியாது, எங்கள்குடும்பம் கலங்கியிருந்தபோது திவ்வியயேசுவிடமும், சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். லூசியம்மா இவர்களிடமும் நான் வேண்டிக் கொண்டதின்படி அவர்கள் எல்லோரையும் நற்சேமத்துடனே காப்பாற்றிவைத்தற்கு எனது இதயம்நிறைந்த நன்றியைத் தெரிவித்து, நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். அவர்கள் எங்களை என்றும் காப்பாற்றவும் இதைப்பிரசுரிக்கப்பிந்தியதற்கு அவர்களின் நிறைந்த மன்னிப்பையும் மன்ருட்டமாய் வேண்டுகிறேன்.

பள்ளிமுனை அ. அ. ரேச்
6-2-58.

## ஜப்பானும் புதியகல்வித்திட்டமும்

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் ஜப்பானிய புதியகல்வித்திட்டத்திற்கு ஓர்கன்னியாஸ்திரியும் பொறுப்பாளியாய் இருந்து வருவார். அங்குள்ள புதாஹ கத்தோலிக்கபெண்கள் கலாசாலையின் தலைவியான சங். ரகாமின் தாயார் அத்தேசகல்வித்திட்டத்தைப் புதிதாகத் திருத்தியமைக்கும்பணி ஒப்படைக்கப்பட்டுள்ள கம்மிற்றியிலே ஓர்அங்கத்தவராகக் கல்விமந்திரியால் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்ருர். யேசுசபையாரின் சோபியா சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் இனற்ரேம்அவர்கள் இந்தக்கம்மிற்றியிலுள்ள மற்ரேர்கத்தோலிக்கராவர். லோகாயதம் காரணமாக ஜப்பானிலேகுற்றங்கள்செய்யும் இளைஞர்களின்தொகை அதிகரித்துக்கொண்டு வருவதாலே பிள்ளைகளுக்கு ஏதோ ஒருவிதமான ஆத்மீகபயிற்சி அளிப்பதற்கான ஆலோசனைகூறுவதும் கம்மிற்றியின் கடமைகளில் ஒன்ருய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

லூர்துநகரைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது "தேவ அன்னையின் நகரம்" எனப் புதுநாமம் பெற்றிருக்கிறது. அது பிரான்சின் தென்பகுதியில்உள்ள பிறெனீஸ்மலைச் சாரலையடுத்த நகரம்.

உலகம் அறியாதிருந்த இந்நகரம் நூறுஆண்டுகளுக்குமுன் பிரசித்தி பெறத் தொடங்கியது. அதுவும் ஏழைச் சிறுமி ஒருத்தி கண்ட தரிசனங்களால். அவளுக்குத் தேவதாய் பலமுறைகளில் காட்சிதந்தார். அங்கு ஆலயம்ஒன்று கட்டவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மக்கள் அவ்விடத்திற்கு யாத்திரையாய் வரவேண்டும்; செபஞ்செய்யவேண்டும்; அத்துடன் தபமுஞ் செய்யவேண்டும்; பாவிகளுக்காக வேண்டுதல் புரியவும்வேண்டும். இறுதியில் தமது பெயர், "அமல உற்பவம்" என அவ்வூர்க் கொடும்மொழியில் கூறினர்.

அமலநாயகியின் கட்டளைப்படி பெர்னதெத் நிலத்தைத்தோண்ட ஓர் நீர்ஊற்றுப் புறப்பட்டது. அந்நீரால் மாதாவின்பேரால் அற்புதங்கள் பலநடந்தன. இன்னும் நடந்தேறுகின்றன, அந்நீர் உலகமெங்கும் கொண்டுசெல்லப்படுகின்றது. லூர்துமாதாவின் பேரால் எங்கும் அற்புதங்கள் நிகழ்கின்றன.

அமல தேவஅன்னை இப்படி லூர்துபதியில்காட்சிதந்தது ஏன்? அவ்விடத்தில் கருணைமழை பொழியக் காரணம்என்ன? நாம் கடவுளுக்கு அருகராகவேண்டும் என்றே அன்னை எமக்கருகில் எம்புவியில் காட்சியருளினர்.

லூர்துமாதாவின்பேரால் உங்கள் பங்குகளில் திருநாள்கள் நடக்கும். லூர்துகெபி அமைக்கப்பெற்றிருக்கும் இடங்களுக்கு நீங்கள் யாத்திரையாய்ச்சென்று, உலகம் சீரான பாதையில்நடந்து உண்மை இன்பம்காண லூர்துமாதா அருள்புரிய வேண்டுங்கள்.

அண்ணை.

## பெரியார் வாழ்விலே

இருபதாம் நூற்றூண்டின் இணையற்ற பேரறிஞர் அவர். ஆங்கில இலக்கியத்திலே அழியாத இடம் உண்டு அவருக்கு. நாடகஉலகத்தின் தனிப்பெருந்தந்தைஎன்று கூறலாம் அவரை. அவரது வாழ்க்கையிலே நடந்த மறக்கமுடியாத சம்பவம்ஒன்று நம்மையெல்லாம் வயிறுதுலுங்கச் சிரிக்கவைப்பதாய் இருக்கிறது.

ஒருநாடக ஆசிரியை அழகியநாடகம்ஒன்றை எழுதியிருந்தாள். அது நடிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அறிஞரும் அந்நாடகத்தைப் பார்த்துத் தன்னைக் கௌரவிக்க வேண்டுமென்று எண்ணினாள் அந்தஅம்மை. அவரைத் தன்னுடன் நாடகசாலைக்கு அழைத்துச்சென்றாள். வசதியாக இருந்த ஓர்ஆசனத்தில் அவரைஅமரச்செய்துவிட்டு, "நாடகத்தை முதலிலிருந்து கடைசிவரையில் பார்த்துவிட்டுச் செல்லவேண்டுகிறேன்" என்று கேட்டுக்கொண்டாள். 'சரி' யென்று தலையசைத்தார் அறிஞர். அவருக்கு முன்னால் காலியாயிருந்த ஓர் ஆசனத்தில் அவள் அமர்ந்து கொண்டாள்.

நாடகம்நடந்து கொண்டிருந்தது. அறிஞர் தமக்கு முன்னாலிருந்த ஆசனத்தின் பின்புறத்தில் கைகளை ஊன்றிக்கொண்டு வசதியாக நாடகம் பார்க்கலானார். அப்போது அவரது நீண்டதாடி ஆசிரியையின் கன்னத்தில்பட்டு உராய்ந்துகொண்டிருந்தது. உடனே தன்னுடைய தலைமயிர்தான் அவிழ்ந்து தொங்குகின்றதுஎன்றுநினைத்து அவரது தாடியைத்தூக்கித் தன்கொண்டையுடன் சேர்த்துக் கட்டிவிட்டாள். இதை அறிஞர் கவனிக்கவேயில்லை.

சிறிதுநேரம் சென்றபின் ஊன்றியகைகளை எடுத்துவிட்டுப் பின்பக்கம் சாய்வதற்காகத் தலையைநிமிர்த்தினர் அறிஞர். தன்தாடி ஆசிரியையின் கொண்டையோடு இணைக்கப்பட்டிருப்பதை அறிந்தார். உடனே அவர் அவளைக்கூப்பிட்டு, "அம்மையே! நான் கடைசிவரை இருந்து நாடகம் பார்ப்பதாகச்சொல்லியும் என்னை நம்பாமல் எங்கேஓடிவிடப் போகிறேனோ என்றுநினைத்து இப்படி என்தாடியைப்பிடித்து உங்கள் கொண்டையோடு சேர்த்துக் கட்டிவிட்டீர்களே!" என்று சொல்லிச் சிரித்தார். தான்செய்த வேடிக்கையானசெயலை நினைத்து அந்தஅம்மையும் சிரித்து விட்டாள்.

சுவைமிக்க இச்சம்பவத்துக்குரிய பெரியார்தான் நாடகத்துறையிலே புதுமையைப்புகுத்தி, நகைச்சுவை நிறைந்த நடையழகைக்கையாண்டு தாய்நாட்டைத் தம் எழுத்தாலே பண்படுத்திச்சென்ற உலகப்பெரியார் ஜோர்ஜ் பெர்னட்ஷோ.

## அணையா விளக்கு

லூர்துபதியை வெவ்வேறுகாலங்களில் கண்டவர்கள் உண்டு. பிறினீஸ்மலையில் மறைந்திருந்த குக்கிராமத்தைக் கண்டவர்கள்உண்டு. ஆனந்தமான சமாதானகாலத்தில் யாத்திரிகட்குக் குதூகலமளிக்க இளஞ்சூரியன் தன்பொற்கிரணங்களைப் பரப்பிக்கொண்டிருப்பான். சனத்திரள் பெருகிக் காவ்நதியைச் சுற்றியிருக்கும் பசுஞ்சோலைகளில் வழியும். பலதேசங்களிலிருந்து யாத்திரிகர்கள் வருவர். கடைகளில் செபமாலையும், பதக்கங்களும் ஏராளமாயிருக்கும். லூர்துபதிக்கும் அதனைச் சூழ்ந்திருக்கும் கிராமமக்களுக்கும் செபமாலைக்கோவை வருவாய் தருமோர் கைத்தொழில்.

* * *

ஒருநாள் யாத்திரிகர்களுள் சடுதியான பரபரப்பு. பட்டணம் முழுவதுமே அசைந்துவிட்டது. நடந்தறியாத நான்குவயதுக் குழந்தையொன்று பெற்றோரின் அணைப்பில் ஊர்வலத்துடன் சென்றது. சடுதியாய் நற்கருணை ஏந்திச்சென்ற குருவுக்குப்பின் ஓடியது. பெற்றோர் திகைத்தனர்; பிள்ளையைப் பிடித்து வந்தனர். அன்றுமாலை யாத்திரிகர்கள் அப்பிள்ளையிருந்த விடுதியை அறிந்து, சென்றுபார்த்தபொழுது குழந்தை மெய்யாகவே குணமடைந்திருக்கக்கண்டனர்.

* * *

1940-ம் ஆண்டு ஆனித்திங்கள். புகையிரதம் லூர்துபதியை நெருங்கிச்சென்றகாட்சி கவலைநிறைந்தது. பூம்பொழில்போன்ற பிரதேசத்தில் வானம்பாடிகள் பாடிக்கொண்டிருந்தன. அறிவுள்ள மக்களின் மடமைச் செயல்களைக் கண்டிப்பதுபோன்று. ஒவ்வொருநிலையத்திலும் கண்ணீரும் கம்பலையுமாய்ப் பெண்கள்நின்றனர். புகையிரதம் பாரமான பீரங்கிகளை ஏற்றிச்சென்றது. "எங்களிடம் அதிகமான பீரங்கிகள் இருந்தாலோ! போர்முனையிலிருந்து எனது கணவன் அனுப்பிய ஓலையைப்பாருங்கள்" எனப்பிரயாணிகளுக்குக் காட்டுவர் அப்பெண்கள்.

லூர்துபதியை நெருங்கியதும் எல்லோர்முகத்திலும் ஆறுதல் மிளிர்ந்தது. அந்த "மை" இருளில் ஒரு வெளிச்சம் கெபியிலிருந்த மாதாசுரூபத்திலிருந்து வந்தது. களைப்புற்றிருந்த பிரயாணிகளுக்கும், கவலையுற்றிருந்தபிறருக்கும் அவ் வெளிச்சம் மனோற்சாகத்தைக் கொடுத்திருக்கும்.

லூர்துபதியின் உண்மைக்காட்சியை அன்று காணவில்லை. வேண்டாவெறுப்பும், நம்பிக்கையீனமும்கலந்தவர்களிற்சிலர் ஐந்தாம்படையினர் அங்குஉளர்எனவும், இங்கிலாந்து பிரான்சை நட்டாற்றில் இறக்கிவிட்டதெனவும் எண்ணினர். அன்புக்குறிகள் குறைந்துவிட்டன, இரவில் சாளரத்தில் காணப்பட்ட வெளிச்சம் எதிரிகளின் வேவுகாரர் அங்குள்ளனரோஎனும் சந்தேகத்தை எழுப்பியது.

* * *

ஆயின் கெபியடியிலும், அதன்சூழலிலும், மகாலயத்திலும் அமைதி குடிகொண்டிருந்தது, நள்ளிரவைத் துலக்கும் நாகரத்தினம்போன்று.

லூர்துபதியிலிருந்து புறப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது பெல்ஜியத்திலிருந்து புகையிரதமொன்று வந்தது. அதன்பெட்டிகள் குண்டுபட்டுக் காயம்பட்டிருந்தன. கால்நடைகளைஏற்றும்பெட்டியொன்றில் ஒருதாயாரும், சகோதரகன்னியாஸ்திரிமாரும் வைக்கோலில் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் ஓர்பெல்ஜியன் கன்னிகா சபையைச் சேர்ந்தவர்கள். அந்த நீண்டபிரயாணத்தை ஊண்உறக்கமின்றி அதிலேயே கழித்திருந்தனர், அசையச் சக்தியற்றுக் காணப்பட்டனர். புகையிரதஸ்தானத்தில்நின்றவர்கள் தங்கள் கஷ்டங்களைமறந்து அவர்களுக்கு அன்ன பானதிகள் அளித்தனர். அவர்களுடைய பய

## இசபெல்லா மேரி

ஒத்தோ என்பவர் தனவந்தரான ஓர் பிரபு. இவர் மகாபக்திமான். ஏழைகள்மீது இரக்கமுள்ளவர். உத்தம கத்தோலிக்கர். இவருக்கு அருமைபெருமையாய் இசபெல்லாமேரி என்னும் ஒரேயொரு மகள் இருந்தாள். தனது திரண்டஆஸ்தியும், அணைகடந்தஅன்பும் தன்மகளுக்கே சொந்தமென்று பிரபுஎண்ணி நடந்தபோதிலும், இசபெல்லாவின் இருதயத்தில் ஆழ்ந்த தெய்வபக்தியையும், கற்பின்மேல் சிறந்தபற்றுதலையும் பதியச்செய்வதே அவரதுமுக்கிய அலுவலாயிருந்தது. தந்தை மகளை நேசித்ததுக்களவாக மகளும் தன்தந்தையை உயிருக்குயிராய் நேசித்து வந்தாள். ஐஸ்வரியவானின் ஏகபுத்திரியாகிய இசபெல்லாவுக்கு யாதொரு குறையுமில்லை. நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக அவளை வளர்ப்பதே தந்தையின் மாளிகையில் தொண்டுபுரிந்துவந்த பணியாட்களின் ஆனந்தம்.

ஓர்நாள் இசபெல்லா பாடசாலை சென்று வீடுவந்து சேர்ந்தவுடன் சிலமுத்துகளைக் கையிலெடுத்து, விளையாடிக்கொண்டிருந்ததை அன்புடன் நோக்கிய அவள்பிதா தன்மகளை அழைத்து: "குழந்தாய்! உன் கையில்இருப்பது மிகநேர்த்தியான முத்துகள் அல்லவா?" என, சிறுமி: "ஆம் அப்பா! மிகவும் நேர்த்தியானவைகளே; என் ஆறுதலும், அகமகிழ்ச்சியும் இவைகள்தான்" என்று பிள்ளைக்குரிய நேர்மையுடன் விடை பகர்ந்தாள். இதைக்கேட்ட தந்தை: "அப்படியானால் அவைகளைஎடுத்து அதோ எரிகிறநெருப்பில்போடு" என்றார். இதைக்கேட்டதே சிறுமி திடுக்கிட்டுத் தந்தையின்முகத்தை நோக்கினாள். விளையாட்டுக்குத்தான் சொல்லுகிறாரோ,அன்றேல் மெய்யாகவே அவைகளை அக்கினிக்கு இரையாக்க வேண்டுமென்று எதார்த்தமாய்த்தான் விரும்புகிறாரோ என்று அறிய ஆவலுற்றவளைப் போல் தோன்றினாள். பிரபு திரும்பவும் அவளைப்பார்த்து: "மகளே! அந்த முத்துகளைச் சுட்டெரித்துவிடு" என்றதைக் கேட்டதும், இசபெல்லாவின் கண்கள்நிறையக் கண்ணீர் ததும்பி அருவிபோல் புறப்பட்டு, அவளது இருகன்னங்களிலும் வழிந்தோடத் தொடங்கியது. சற்றுநேரம் தாமதித்தாள். "சரி மகளே, உனது இஷ்டப்படி செய்; நான் உனக்குயாதாமொரு கட்டளை இடுவதற்கு உன்மீது எனக்குள்ள பட்சமே காரணமென்பதை நீ அறிந்திருக்கிறாய் அல்லவா?" என்று தந்தை சொல்லிவிட்டுத் தன்வேலையைப் பார்த்தார். இவ்வார்த்தைகள் இசபெல்லாவின் செவியில்விழவே அந்த நல்லமகள் உடனே தான்வைத்திருந்த அழகியமுத்துகளையெல்லாம் வாரியெடுத்து நெருப்பிலே எறிந்துவிட்டாள்.

முத்துகள் அக்கினியில் பற்றிஎரிந்து வெடிப்பதைக்கவனித்த ஒத்தோ

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

(அணையா விளக்கு — continued:)

ணம் எங்குமுடியுமென ஒருவரும் அறிந்திலர்.

* * *

பதினேழுவருடங்கள் பறந்துவிட்டன. பெர்னதெத்துடைய தரிசனங்களே எமதுமனக்கண்முன் நர்த்தனஞ்செய்கின்றன. ஏனெனில், இந்நூற்றூண்டுநிறைவில் அவர் மகிமைப்படுத்தப் பெறுவர். இரவில் வந்துசேரும் யாத்திரிகர்களுக்கு அமலஅன்னையின் திருஉருவம் வரவேற்பையும், ஆறுதலையும்அளித்து மிளிருமென நம்பியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பத்திரிசியார் கல்லூரி விஞ்ஞானக் கலைக் காட்சியும் கைப்பணிக் காட்சியும்

**மாசி 12-ம் திகதி தொடக்கம் 16-ம் திகதி வரையும் நடைபெறும்.**

முதல் நாள் அலங்காரத்திறப்பு வைபவம் 12-ம் திகதி புதன்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறும்.

**இவ்வுன்னத வைபவத்தில் கலந்துகொள்ளத் தவருதீர்கள்.**

1. கல்வி உபகரணங்கள்
2. அணுச்சக்தி சேவைகள்
3. சினிமாக் காட்சிகள்

**பிரவேசக் கட்டணம்:—**

**வளர்ந்தோர் சதம். 25. ஆசிரியர்—சகிதம்—மாணவர் சதம். 15.**

## SCIENCE & CRAFTS EXHIBITION

AT ST. PATRICK'S COLLEGE, JAFFNA

on the 12th to 16th of February, 1958

Formal Opening at 6·00 p.m. on Wednesday

**Miss not this Golden Opportunity of an Intellectual Treat**

(1) Teaching and Learning Aids
(2) "Atoms for Peace"
(3) Cinema Shows

**IN AN ENCHANTING ENVIRONMENT**

**Admission:** *Adults 25 cts. School Children-with-Teachers 15 cts.*

### இசபெல்லா மேரி

(புனிதவீரர்பக்கத் தொடர்ச்சி)

பிரபு தன்பிரியமகளைக் கட்டியணைத்து. அன்புடன் முத்தமிட்டு விலையுயர்ந்த வைரமணிபதித்த தங்கப் பதக்கம்ஒன்றைஎடுத்து அவளுக்குக்கொடுத்து: "என் கண்மணி! இதை எடுத்துக்கொள்; முத்துகளைவிட, உன்பிதாவாகிய என்னை அதிகமாய் நேசிக்கிருயா என்று பார்க்கத்தான் இப்படிச்செய்தேன்; என்னை நேசிக்கிருயென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை; ஆனுல், இனி இப்பதக்கத்தைப் பார்க்கும் போதெல்லாம் உன்தந்தையும், என் தந்தையுமாகிய பரலோகபிதாவை நினைத்துக்கொள்; விலையுயர்ந்தவை என்று மனுஷன்மதிக்கும் இவ்வுலக செல்வங்கள்யாவும் அழிவுக்குரியவை; இவைகளையெல்லாம் நமது மோட்சதந்தைக்காக விட்டுவிடுவோமாகில், அவர் ஒன்றுக்குநூருய்ச் சந்மானம்அளிப்பார் என்பதை மறவாதே; அவர் உன்னிடம்கேட்பதை இல்லையென்று ஒருபோதும் சொல்லாதே; அவரதுகற்பனைகளில் எதையாவதுமீறுவதைப்பார்க்கிலும் உன் உயிரையே கொடுத்துவிட எப்போதும்தயாராயிரு" என்று உன்னத நற்புத்திபுகட்டினுர் அவ்வுத்தம தந்தை

"ஸாக்ஸி"

—(ᵔ)—

# லூர்து நூற்ருண்டுவிழா

"வேண்டுதல்மாநகர்" எனப் புகழ் நாமம் பெற்றிலங்குகிறது லூர்து நகரம். "அமலோற்பவ இல்லம்" எனச் சிறப்புடன் அழைக்கின்றனர் அதை. இத்திருநகரில் மாசி 11–ந் திகதியன்று திருச்சபைத் தலைவரின் பிரதிநிதி நூற்ருண்டுவிழாவை அங்குரார்ப்பணஞ் செய்துவைப்பார். இந்தவிழா பலதிருவிழாக்களாக மார்கழி 8–ம்நாள்வரை நீடித்திருக்கும்.

உறைபனிஉருகி ஊற்றெடுத்துப் பெருகிப் பிரளயமாய்ப்பாயும் காவ் நதிபோன்று என்றும் லூர்துபதியை நோக்கிச்செல்லும் யாத்திரிகர்கள் இவ்வாண்டு அணியணியாய் இத்திருசேத்திரத்தைத் தரிசிப்பார்கள். ஏழு, எட்டுலட்சம்மக்கள் யாத்திரை செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பரிசுத்தபிதா பிரான்சின் ஞானமேய்ப்பருக்கு விடுத்த நிருபத்தில் எமதுஆண்டவள் விடுத்தசெய்தியை நினைவுறுத்தினுர். சுவிசேஷங்கூறும் செய்தி தபத்தையும், மனமாற்றத்தையும் வற்புறுத்துஞ் செய்தி. லோகாதயத்தை விடுத்து, வைதிகக் கொள்கைகளில் சமுதாயம் உருப்படவேண்டுமெனவுங் கூறினுர்.

இவ்வாண்டு விழாவுக்கெனப் பரிசுத்தபிதா ஒருசெபம் இயற்றி, அதைத் திருசேத்திரத்திற் செபிப்பவருக்கு மூன்றுஆண்டுப்பலனையும் அளித்திருக்கின்ருர்.

### நாள்தோறும்

கருதினுல் திஸ்செறன்ற் உடையவும், பரீஸ் அதிமேற்றிராணியார், கருதினுல் பெல்ரினுடையவும் ஆதரவில் லூர்துபதி ஆண்டகையின் தலைமையில் சர்வதேசக் கம்மிற்றிஒன்று நூற்ருண்டுவிழாக் கருமங்களை நடாத்திவருகிறது. அர்ச். பத்தாம் பத்திநாதர் ஆலயநிர்மாணம் இக்கம்மிற்றியின் கைங்கரியங்களில் ஒன்ருகும்.

இந்நூற்ருண்டுவிழா நிகழ்ச்சிகளில் நற்கருணை ஊர்வலம், நோயாளரை ஆசிர்வதித்தல், தீவர்த்திஊர்வலம் போன்றவை ஒவ்வொருதினமும் நடைபெறும். விழா ஆரம்ப தினமாகும் மாசி 11–ந் தினமும், பங்குனி 25 ("நாமே அமலோற்பவம்" எனக் கூறிய தினம். இத்தினத்தில் பத்தாம்பத்திநாதர் மகாலயம் அபிஷேகஞ் செய்யப்பெறும்). ஆடி 16 (கடைசிக் காட்சியருளிய தினம்). ஆவணி 15 (ஆரோபணத்திருநாள்). புரட்டாதி 10–17வரை (மரியாய் மகாநாடு) விசேஷவிழாத் திகதிகளாகும்.

இனிமேல் குறிப்பிடவிருக்குந் தினத்தில் பரிசுத்தபிதா ஓர்செய்தி அஞ்சல்செய்வார்.

இவ்வாண்டின் ஒவ்வொரு தினத்திலும் லூர்துபதியும், அதனைச்சார்ந்த தலங்களும் தீபாலங்காரஞ் செய்யப்பெறும். மலைகளை வர்ணவிளக்குகள் அலங்கரிக்கும்.

### படக்காட்சிகள்

சுவாமி பெயிற்றன் தயாரித்த செபமாலைக் காரணிக்க விளக்கப் படங்கள் ஆரம்பவிழாவிற்கு முந்திய திரிதினங்களில்காட்டப்பெறும். சிற்சில "காட்சிகளில்" 10,000 மக்கள் பங்குபற்றிய "அர்ச். பெர்னதெத் அம்மாள்" சரிதமும் பேசும்நிறப்படமாகக் காட்டப்படும்.

### மகாலயம்

இரு பாரியகட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒன்று அர்ச். பத்தாம்பத்திநாதர் மகாலயம். உலகத்திலுள்ளபெரியஆலயங்களுள் இதுவும் ஒன்று. சம்பேதுருவானவர் மகாலயத்தின் முக்காற்பங்களவுள்ளதும், 20,000 மக்களைக் கொள்ளக்கூடியதுமான இவ்வாலயம் பங்குனி 25–ந்தினம் பிரதிட்டை செய்யப்பெறும். தூண்கள் இல்லாமலும், "எதிரொலி தவிர்ப்பது"மான இக்கட்டடத்தைச் "சிற்பக்கலையின் துணிகர முயற்சி" என எல்லோரும் அழைக்கின்றனர். வெளிஊர்வலம் நடத்த இனிமேல் எதுவுமே தடைசெய்ய முடியாது. காலநிலை தடையாய் இருப்பின் அதை இங்குநடத்த விசாலமான இடம்உண்டு. 15,00,000 பவுண்பெறுமதியான இக்கட்டடத்திற்கு உலககத்தோலிக்கமக்கள் நன்கொடை அளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். [illegible] பிதாவின் [illegible]

### அடைக்கல புரம்

லூர்துபதிக்குச் செல்லவிரும்பினுலும், விடுதிஅமர்த்தப் பணவசதிஇல்லாதஏழைகளுக்கெனச் "சம்பேதுரு நகரம்" எனஒன்று 45ஏக்கர்நிலத்தில் கட்டப்படுகிறது. இங்கு 800சனங்களும், இருபதுகுருமாரும்விடுதிச்செலவின்றித் தங்கலாம். இதற்கும் கத்தோலிக்கமக்களின் நன்கொடை வேண்டப்படுகிறது.

இங்குவந்துகுழுமும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களின் வசதிக்கெனப் புதுவீதிகளும், தண்ணீர்க்குழாய்களும், தபால்ஆபீசும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இங்கு அனுப்பப்பெறும் தபால்அட்டைகளின்தொகை அதிசயமானது. "மரியாயின் ஆண்டில்" 80,00,000; இவ்வாண்டில் 2,00,00,000 ஆகலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

### விமான நிலையம்

லூர்துபதியின் பேர்போன நீராடுந்தொட்டிகள் கெபிக்குஅப்பால் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இப்பதிக்குரிய "ஒசன்" விமானதளம் 1,30,000 பவுண்செலவில் பெருப்பிக்கப்பட்டிருக்கிறது. 1956-இல் 18,000 பிரயாணிகளை ஏற்றியிறக்கிய இத்தளத்தில் 70,000 பிரயாணிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

இங்கு தங்குவதற்கு வசதியே முக்கிய பிரச்சினை. தலவாட்சிப்பகுதியினர் தங்களால்இயன்றதைச் செய்து வருகின்றனர். 38,000 சனத்திற்கு விடுதிவசதியளிக்கக்கூடியது இப்பட்டினம். யாத்திரிகர்களில் அநேகர் போ, தார்ப், ஆர்கெல்–கசோமுதலிய இடங்களிலுள்ள இளைஞர் ஓய்வுவிடுதிகளிலிருந்து நாடோறும் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவர். தனிஅறைகள் எவருக்குமேகிடையாது. 1958-ம்ஆண்டு யாத்திரிகர்கள் சொல்லிற்கேற்ப யாத்திரிகர்களாகவேயிருப்பர்.

### ஆசிரியகலாசாலைப் புகுமுகப்
## பரீட்சை வகுப்புகள்—1958.

இவ்வருடம் வைகாசிமாதம் நடைபெறவிருக்கும ஆசிரியகலாசாலைப் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றும மாணவர்களுக்கு உதவியாக மாசிமாதம் ஐந்தாந்திகதி தொடக்கம் கொழும்புத்துறை அர்ச் சூசையப்பா தாபனத்தில் வகுப்புகள் நடைபெறும்.

அவ்வகுப்புகளிற்சேர்ந்து படிக்க விருமபும மாணவர்கள் எமக்கு விணணப்பித்து வேணடிய ஒழுங்குகள் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுவாமி வ. தியோகுப்பிள்ளை
அதிபர்.
புனிதவளனுர் ஆசிரியகலாசாலை,
கொழும்புத்துறை.

### லூர்துமாதாவின் நகரம்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)


எல்லோரும் கத்தோலிக்கசகோதரர், ஒருவரையொருவர் சந்திக்க ஆவல் காண்பிப்பவர். சேவைசெய்யக்கிடைப்பது பெருஞ்சலாக்கியமெனக் கருதுபவர். ஆம்மட்டா, இன்று லூர்துநகர் தற்கால உலகுக்குச் சவால்விடும் ஓர் நகரமாகின்றது. மமதையானபோக்கும், லோகாயதமும்நிறைந்த இவ்வுலகில் ஆன்மாத்தவிடயங்களுக்கு மதிப்புக்கிடைப்பதும், இவைகள் உண்மையென ஆதாரத்துடன் நிலைநாட்டப்படுவதும் அங்குதான். ஏதாவது மூடமந்திரமாக அங்குஎதுவும் நடப்பதில்லை. எந்தவைத்தியபண்டிதனும், சாஸ்திரவல்லுநனும் அங்கு நடந்தேறும் அற்புதங்களை முன்னும் பின்னும்ஆராயப் போதியவசதிகள்உண்டு.

கடவுள்ஒருவர் உண்டென்பது உண்மை. தங்கள்உயிரிலும்பார்க்க உறுதியானஉண்மை. கடவுள் மனித்அவதாரம் எடுத்ததும், உலகத்தை ஈடேற்றினதும், லூர்துபதியிலுள்ள கற்பாறைகளைப்போல் நாஸ்திகர்களே ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மைகளாகின்றன. அவர்கள் அங்கே விசுவாசிகள் இயலாததுஒன்றைக் கேட்பதையும், அந்தஇயலாக்கருமம் தங்கள் கண்முன்பாகக் கையும்மெய்யுமாகக் கிடைப்பதையும் கண்ணுரக்காண்கிருர்கள். விஞ்ஞானிகளால் ஆராய்ந்து அறியமுடியாத ஓர்ஞானச்சக்தி எளியவர்களையும், பிணியாளரையும் வந்துஇயக்குவதையும், அந்தச்சக்தி விசுவாசிகளுடைய வேண்டுதல்களின்பலனே என்பதையும் காணுகிருர்கள். கத்தோலிக்கர் வழிபடுமகடவுள் நேற்றும், இன்றும், என்றும்இருக்கும் உண்மைப்பொருள்என்பதற்குச் சாட்சிபகருகிறது லூர்துநகரம். பாலைவனத்தில் மன்னுவைப்பொழிந்து இஸ்ருயேலரை உணவூட்டிய—அவர்கள் மாமிசம்விரும்பியபொழுது குவெயில் என்றபட்சிகளை உணவாகக் கொடுத்த—இரவில் தீபஸ்தம்பத்தால் வழிகாட்டிய அதேகடவுள்தான் தமது அருளால் அங்குபிரசன்னமாகி முடவரையும், குருடரையும், பிணியாளரையும் சொஸ்தப்படுத்துகிருர். சுவிசேஷத்தில் நாம்வாசிக்கும் அற்புதங்கள் இன்று லூர்துகெபியில் நடந்தேறிக் "கர்த்தரின்கரம் குறுகவில்லை" எனக் காட்டுகின்றன. கானுவூரின் கலியாண விருந்திலே உணவுஇருந்தது, பானம் குறைந்துவிட்டது. தமதுமக்கள் இரசம் அருந்தி மகிழ்வெய்தவேண்டுமென விரும்பிய தேவதாய் கிறீஸ்துநாதர் தமதுமுதற்புதுமையைச் செய்யப்பண்ணினுர். அந்தத் திருத்தேவதாயே இன்றும் தன்புற்றுகொந்துபோயிருக்கும் தமதுமக்களை இரக்கமாய்ப்பார்த்துச் சகலவழிகளாலும் அவர்களுக்கு மகிழ்வும், ஆறுதலும் கொடுக்கமுயற்சிக்கிருர். இந்தலூர்துபதி நூற்ருண்டிலே புணபட்டமக்கள்மேல் அருள் மாரிபெய்யுமென்றும், இரட்சணியத்துக்கு அவசியமான விசுவாசக் கொடையை எமதுநாட்டுமக்களுக்கு அபரிமிதமாய் இரக்கமுள்ள இராக்கினி கொடுப்பாரெனவும் எதிர்பார்க்கலாம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 6-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்து திருசேத்திரத்தின் பல்வேறு காட்சிகள்



யாத்திரிகர்களின் கண்ணேயும், கருத்தையும் ஒருங்கே கவர்ந்து கவினுற்று விளங்கும் லூர்துபதி மகா தேவாலயம்.

## லூர்து எனும்நாமம் பிறந்தவரலாறு


ஆரம்பத்தில்லூர்து ஓர்பெரிய கிராமமாய் இருந்தது. "ஷாட் ரோ போட்" என்ற லூர்துக் கோட்டையானது மத்தியகால சரித்திரசம்பவத்தைக் கொண்டுள்ளது. சேனுபலங்கொண்டு வெற்றிகொள்ள முடியாத அத்துணைபலம்பொருந்திய மலைக் கோட்டைக்கு இது உறைவிடமாயிருந்தது. மத்தியகாலங்களிலே ஸ்பெயினேயும், சிசிலியையும் வெற்றிகொண்டு பிரான்சின் மேல் படையெடுத்த சரசென் சாதியைச்சேர்ந்த மகமதியர்ஒருவர் 778-ம்ஆண்டு ஓர்கிறீஸ்துவராயினுர். இவர் லோறஸ்எனும் நாமத்தோடு ஞானதீட்சைஅருளப்பெற்ருர். இவருடையநாமத்திலிருந்து திரிந்தேலூர்துஎனும் நாமம் பிறக்கலாயிற்று. பரிசுத்த தேவதாயாரின் திருக்காட்சிகளால் இன்று உலகப்பிரசித்தி பெற்றுவிளங்கும் லூர்துஎனும் பெயரின் ஆரம்பவரலாறு இதுவேயாகும்.



இவள்நாமம் மரிய லபிருஞ்ச்என்பது. ஓர் பிரான்சியபெண். இவள் சயரோகங்கண்டு சாகுந்தருவாயில் இருந்தாள். இவள்வாயிலிருந்து ஓயாமல் சிதலும், இரத்தமும் வந்துகொண்டிருந்தது. இரைப்பை முற்ருகப் பழுதுபட்டுப்போயிருந்தது. இவள் லூர்துபதியின் அற்புதநீரூற்றிலிருந்துபுறப்படும் ஜில்லென்று குளிர்ந்ததண்ணீரில் மூன்றுநிமிஷந்தானும் அமிழ்ந்திக்கிடக்கவில்லை. அதற்குள்ளாகச் சரீரமுழுவதும் சவுக்கால்அடிப்பதுபோன்றஉணர்ச்சியடைந்து, பூரண சுகம்பெற்றுச் சந்தோஷம் மேலிட்டவளாய் அங்கும்இங்கும் சுற்றித்திரிந்தாள்.


தங்களுக்குச் சிகிச்சை செய்த வைத்தியர்கள் பலராலும் தீராப் பிணியாளரென்று கைவிடப்பட்டுக் கடைசியாக ஆற்ருது லூர்துபதியைச் சரணடைந்து அற்புதமாக அங்கே மாதாவின் அருளால் குணமடைந்தவர்களை வைத்திய பண்டிதர்கள் திரளாகக் குழுமியிருந்து சோதித்துப் பார்க்கும் வைத்திய பரிசோதனைத் தலம். அதிலே சமுகமாயிருந்து பரிசோதனை நடத்தும் வைத்திய பண்டிதர்களின் குழு இங்கு காணப்படுகிறது.






இதிலே வானளாவியதாய் வனப்புவாய்ந்து தூரத்தில் காட்சியளிப்பது லூர்துபதி மகாதேவாலயம். சமீபத்தில் காணப்படுவது அப்பதியின் அழகான சேமக்காலை. மரித்த ஒருவரின் கல்லறை ஞாபககட்டடமே அதில் காணப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்பிரான்சிலே செயற்கை அழகு பொலிந்து விளங்கும் பிறனீஸ் மலையின் அலங்கார தோற்றமும், அதற்கோர் அணி கலமாகத் திகழும் லூர்துபதி யின் சித்திர-சிற்ப வேலைப்பாடு கள் அமைந்த சிங்கார மகா தேவாலயமும்.




14-வது பிராயத்தில்
அர்ச். பேர்னதெத் அம்மாள்



இவர்நாமம் டக்றர் டொகுஎன் பது. மறுமைச்சீவியம் உண்டுஎன்ப தைநம்பாத ஓர்வேதவிரோதியான இவர் லூர்துபதியில் நிகழ்ந்தசம்ப வங்களுக்கு ஓர்கண்கண்ட சாட்சி யாவர். பிந்தஇவர் மனந்திரும்பி ஓர்புத்தகம்எழுதினார். "நான்கண்ட படியால் விசுவசிக்கிறேன்" என்று இவர். அப்புத்தகத்துக்குத் தலையங் கம் கொடுத்திருந்தார்.



"தாவீதன் குமாரனான யேசுவே! என்மேல் இரக்கமாயிரும்"

இதோ! மேலே கொடிவிட் டுச் சரிந்துகொண்டிருக்கும் ஓர் பெரிய சுற்றுப்பிரகாரம். எல் லோரும் உதடுகளிலிருந்து தேவனுக்கும், தேவதாயாருக் கும் புகழ்ச்சியான தோத்திரப் பாடல்கள் அலைபோல்எழுந்து சூழவிருக்கும் பள்ளத்தாக்கு களில் எதிரொலிசெய்கின்றன. இதுதான் லூர்துபதியில் நடந் தேறும் தேவநற்கருணைச் சுற் றுப்பிரகாரம். அந்தநாளிலே எமது ஆண்டவர் யூதேயா வின் வீதிகளின் வழியாகச் சென்று அவற்றின் இருமருங் கும் காத்துக்கொண்டிருந்த பிணியாளரைக் குணப்படுத் திக்கொண்டு போனதுபோல, இந்தநாளிலும் பிணியாள ரைக் குணப்படுத்த எழுந்தரு ளுகிறார். "தாவீதன் குமார னான யேசுவே! என்மேல் இரக்கமாயிரும்" என்று படுக் கையிலுள்ள நோயாளரின் வாயிலிருந்து உருக்கமான வேண்டுகோள் பிறக்கிறது.



இதுதான் லூர்துபதியின் பிரஸ்தாபம்பெற்ற திருக்கெபியாகும். அதற்கு மேலாக வலதுபுறத்திலே விலையேறப்பெற்ற சலவைக்கல்லினால் அழகுறச் செய்த வசீகரமான ஓர்சுரூபம் இருக்கின்றது. இது பேர்னதெத்அம்மாள் காட்சியிற்கண்ட அமலோற்பவ அன்னையின் திருச்சாயல்.



லூர்துபதியிலே மசபியேல்எனும் குகையில் திருஅன்னைமரி சிறுமி பேர்னதெத்துக்குக் காட்சியளிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org